காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 31 செவ்வாய்க்கிழமை 14.02.2023 கதிர் 98

## இது ரகசியம் அல்ல!

கொழும்பில் வீட்டு மோசடி ஒன்றில் தொடர்புபட்டுள்ள தமிழ் அரசியல்வாதி ஒருவரின் மீதி விவரங்களைச் இன்று சொல்வதாகச் சொல்லியிருந்தேன் இல்லையா...

வழக்கு மீண்டும் விசாரணைக்கு வருவதற்கு ☞2

# “பைத்தியக்கார அரசு” விளாசி தள்ளிய சஜித்

## மக்களின் இறையாண்மையுடன் விளையாட அனுமதிக்கக்கூடாது எனவும் வலியுறுத்து



கொழும்பு, பெப். 14

தேர்தலை ஒத்திவைக்கும் அசின் முயற்சி பைத்தியக்காரத்தனமான செயல் என்று கடுமையாக விமர்சித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச.

இதற்கு எதிராக அனைத்து சக்திகளும் ஒன்றிணைவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்துள்ளார். ☞2

# புலிகள் கேட்டது தனியான நாடு; நாம் கேட்பது அதிகாரப் பகிர்வு!



## விக்கி விளக்கம்

விடுதலைப்புலிகள் கேட்டது தனியான ஒரு நாடு. நாம் கேட்பது அப்படியல்ல. நாட்டைப் பிரிக்காமல் அதிகாரத்தை மட்டும் பகிர்ந்து கேட்கின்றோம்.

– இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தெற்கு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியின் போது தெரிவித்ததாவது:– ☞8

# மாநகர சபையில் இன்று தோற்பாரா ஆனல்ட்?

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் அதன் புதிய முதல்வர் ஆனோல்ட்டினால் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9:30 மணியளவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த வரவு செலவுத் திட்டம் சபையில் பெரும்பான்மையுடன் அங்கீகரிக்கப்படுமா? அல்லது நிராகரிக்கப்படுமா? ஆனல்ட் மீண்டும் தோற்கடிக்கப்படுவாரா என்கிற பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் ☞8

# அரச படையினரால் பெண் சுட்டுக்கொலை

கொழும்பில் அரச படையினரால் பெண் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். நேற்று மாலை நடந்த இந்தச் சம்பவம் தவறுதலாக இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தெமட்டகொட பகுதியில் போதைப் பொருள் தேடுதலில் படையினர் ☞9

# சலுகைகள் அறிவிப்பு

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள தரப்புக்களுக்கான சில சலுகைகளை நிதி அமைச்சர் என்ற முறையில் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். அவரது முன்மொழிவுகளை அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது.

வறுமையில் வாடும் 20 லட்சம் குடும்பங்களுக்கு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் தலா 10 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. ☞9

# ஆனல்ட்டின் தெரிவுக்கு எதிரான வழக்கு மார்ச் 7க்கு ஒத்திவைப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.14

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வராக இ.ஆனல்ட் தேர்வு செய்யப்பட்டமையை இடை நிறுத்தக் கோரிய வழக்கு நேற்றைய விவாதத்தின் பின்பு மார்ச் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர முத்வராக இ.ஆனலட் 2023.01.19 அன்று தேர்வு செய்யப்பட்ட முறைமைக்கு எதிராக இடைக்கால நிவாரணம் கோரி மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபனால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று மீண்டும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மார்ச் 7ஆம் ☞9



# பிரெஞ்சு தூதுவருடன் செல்வம், சித்தர் பேச்சு

இலங்கைக்கான பிரெஞ்சு தூதுவர் ஜீன் பிரான்கொய்ஸ் பக்டெட்டை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் நேற்று கொழும்பில் உள்ள தூதரகத்தில் சந்தித்தனர். ☞9

# யாழ்ப்பாணத்தில் கனடா அலுவலகம் பரிசீலிக்கலாம் என்கிறது தூதரகம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.13

யாழ்ப்பாணத்தில் கனேடிய தூதரக அலுவலகம் ஒன்றை அமைப்பது குறித்துப் பரிசீலிக்கலாம் என யாழ்ப்பாணம் வந்த இலங்கைக்கான கனேடியத் தூதுவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர முதல்வருக்கும் கனேடியத் தூதுவருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் இந்த விடயம் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

1990ஆம் ஆண்டு குடாநாட்டில் 1.1 மில்லியன் மக்கள் வாழ்ந்த இந்த மாவட்டத்தில் இன்று 7 லட்சம் மக்களே வாழ்கின்றனர். இருப்பினும் எமது மக்கள் 4 லட்சம் பேர் கனடாவில் வாழ்கின்றனர். இந்த நாட்டில் அரசியல்நிலை திடமற்றிருப்பதே அதற்குக் காரணம்.

அதேநேரம் கனடாவில் வாழும் தமிழர்களின் நேரடி உறவினர்கள் பலர் இன்னமும் யாழ்ப்பாணத்தில் வாழ்கின்றார்கள். அவர்களுக்கான தேவைகளை, சேவைகளைப் ☞9

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் இரண்டு நாட்கள்தான் இருக்கின்றன. பொலிஸார் தமது விசாரணை அறிக்கையில் கொடுத்திருக்கும் பல்வேறு விவரங்களும் அந்த அரசியல்வாதிக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய முன்பிணையை அடுத்த தவணையில் நீதிவான் நீக்கிவிடுவதற்கான வாய்ப்புக்களை அதிகரித்திருக்கின்றன.

மோசடி செய்த வீட்டின் உரிமையாளரின் பெயரில் ஒரு அரசியல் கட்சியின் தலைவரது சாரதிக்கு அடையாள அட்டை தயார் செய்து அவரே வீட்டு உரிமையாளர் என்று ஏமாற்றி சட்டத்தரணி மூலம் வீட்டை விற்பனை செய்தவர் ரெலோவில் இருந்து வெளியேறி தனிக் கட்சி தொடங்கியவர். ஆனால், இந்த மோசடியில் சாட்சிக்கையெழுத்துப் போட்டவர் ரெலோவில் இப்போதும் முக்கிய பதவியில் இருப்பவர்.

சாரதியின் பெயர் பொன்னுசாமி கணேசமூர்த்தி. வீட்டு உரிமையாளரின் பெயர் வேலு நடேசு ஜெனோசீலன்.

பொன்னுசாமி கணேசமூர்த்திக்கு நடேசு ஜெனோசீலனின் பெயரில் போலி அடையாள அட்டை தயாரித்து, அதைக் கொண்டுதான் வீட்டை விற்றதாக மோசடி நடந்திருக்கின்றது என்கிறது பொலிஸ்.

ஜெனோசீலனாக மாறிய கணேசமூர்த்தியால் வீடு விற்கப்பட்டது பராராஜசிங்கம் உதயராசாவிற்கு. இவர் சிறீ ரெலோ கட்சியின் தலைவர்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இதுபோன்ற இரு காணி வழக்குகளில் மோசடி உறுதியைத் தயாரித்த சட்டத்தரணி, அதனை வாங்கியவர்கள், சாட்சிகள், சாட்சியைத் தயார்ப்படுத்தியவர்கள் என்று அனைவரையும் கூண்டோடு தூக்கி சிறைக்குள்ளே வைத்தமை வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். அது போன்று நடந்துவிடலாம் என்கிற அச்சத்தில்தான் ரெலோவின் முக்கிய பிரமுகர் தனக்கு முன் பிணை வாங்கிக் கொண்டார்.

அப்படி வாங்கியபோது, நீதிமன்றம் அவருக்கு ஒரு நிபந்தனை விதித்தது. அவரது கடவுச் சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவேண்டும் என்பது அந்த நிபந்தனை. அதன்படியே அந்த அரசியல்வாதி நாட்டுக்குத் திரும்பிவந்ததும் அவரது கடவுச் சீட்டை வாங்கி நீதிமன்றத்தில் ஒப்படைத்த பொலிஸார் அது பற்றிய அறிக்கையைத் தயாரிக்கும்போதுதான் பல விடயங்களைக் கண்டறிந்தனர்.

அதில் முதலாவது அந்தக் கடவுச் சீட்டு இலங்கையின் உயர் அதிகாரிகள் மட்டத்தில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் சலுகைக் குறிகொண்ட கடவுச் சீட்டு. அரசியல்வாதிகளுக்கு இராஜதந்திரக் கடவுச்சீட்டு வழங்கப்படுவது போன்று, அரச அலுவல்கள் நிமித்தமாக வெளிநாடுகளுக்குப் பயணிப்பதற்கான சிறப்புச் சலுகையைக் குறிக்கும் கடவுச் சீட்டு அது.

அந்தக் கடவுச் சீட்டு இந்த அரசியல்வாதியிடம் எப்படி வந்தது என்று கிளறத் தொடங்கியது பொலிஸ். ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மைத்திரி – ரணில் கூட்டு அரசின் காலத்தில் குழுக்களின் பிரதித் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். அப்போது அவரது செயலாளராக இந்த அரசியல்வாதி பெயரிடப்பட்டிருந்தார். அதனைப் பயன்படுத்தி அவர் அந்த சலுகைக் கடவுச் சீட்டைப் பெற்றிருக்கிறார். அது பரவாயில்லை. அப்படிச் செய்வதற்குச் சட்டத்தில் இடமிருப்பதால் அதனைச் செய்தார். ஆனால், அப்படிப் பதவி நிலை காரணமாகக் கடவுச் சீட்டுப் பெறுபவர்கள் அந்தப் பதவியிலிருந்து விலகிய உடனேயே அதனை மீளக் கையளித்துவிடவேண்டும் என்பது சட்ட நிபந்தனை. பதவியிழந்த பின்னரும் அந்தக் கடவுச்சீட்டை அவர் பயன்படுத்துவது சட்டவிரோதம். தண்டனைக்குரிய குற்றம்.

சாட்சிக்கையெழுத்துப்போட்ட அரசியல்வாதியோ 2018.09.11 அன்று அரச அலுவல்களுக்கான புதிய கடவுச்சீட்டை சலுகைக் குறியோடு பெற்றிருக்கின்றார். ஆனால் அது பெறப்பட்டு குறுகிய காலத்திற்குள்ளேயே அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டு செல்வம் அடைக்கலநாதனின் குழுக்களின் பிரதித் தலைவர் பதவி பறிபோய்விட்டது. அப்போதே இவரது பதவி நிலையும் வலுவிழந்துவிட்டது. உடனடியாகவே அவர் தனது கடவுச் சீட்டைத் திருப்பி ஒப்படைத்துவிட்டு சாதாரண கடவுச் சீட்டுக்குத் திரும்பியிருக்கவேண்டும். ஆனால் அது நடக்கவில்லை.

கடவுச் சீட்டுக்குரிய பதவி நிலையில் இல்லாமலேயே 2022.07.31இல் அவர் அந்தக் கடவுச் சீட்டைத் தவறாகப் பயன்படுத்தி பிரிட்டனுக்குப் பயணமாகியுள்ளார். அங்கிருந்து திரும்பி வந்த பின்னர் 2022.09.09இல் மீண்டும் வெளிநாடு சென்று திரும்பி வந்திருக்கிறார். அப்படித் திரும்பி வரும்போதுதான் அவரது கடவுச்சீட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

இப்போது கடவுச் சீட்டை முறைகேடாகப் பயன்படுத்தியது என்பது பொலிஸார் தூக்ககிப் பிடித்திருக்கும் ஒரு குற்றச்சாட்டு. அதைவிடவும் முக்கியமான ஒன்றையும் பொலிஸார் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டை மோசடி வகைக்குள் கொண்டு வந்து ஆளின் கழுத்தை இறுக்கலாமா என்று வளம் பார்த்துக்கொண்டிருக்கிறது பொலிஸ்.

ஏனெனில் அந்த அரசியல்வாதி முதலில் பயன்படுத்திய கடவுச் சீட்டில் அவரது பெயர் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருப்பதற்கும் புதிய கடவுச் சீட்டில் அவரது பெயர் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருப்பதற்கும் இடையில் வேறுபாடு உள்ளது. தமிழ்ப் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதும்போது இரண்டு மூன்று வகைகளில் எழுத முடியும். உச்சரிப்பு வேறுபாடில்லாமல் அப்படி எழுதுகிற வழமை உண்டு. குறிப்பாக பெயர்ச் சாத்திரம் பார்ப்பவர்கள் தமிழ்ப் பெயர்களுக்கு ஆங்கில எழுத்துக்களை எழுதும்போது கூட்டுஎண்ணைக் கணித்து அதற்கேற்ப எழுத்துக்ளைச் சேர்த்துக் கொள்ளும் வழக்கம் இருக்கின்றது. ஆனால் இதில் அப்படியில்லை. அந்த அரசியல்வாதியின் முழுப் பெயரிலுமே ஆங்கில எழுத்துக்கள் மாற்றப்பட்டுள்ளன.

அதாவது அவரின் பெயரும் அவரது அப்பாவின் பெயரும் ஆங்கிலத்தில் எழுத்துக்கள் மாற்றபட்ட நிலையிலேயே கடவுச் சீட்டில் எழுதப்பட்டன. இந்த வீட்டு மோசடி இடம்பெற்றதன் பின்னர்தான் புதிய கடவுச் சீட்டு அந்த அரசியல்வாதியால் பெறப்பட்டுள்ளது. எனவே வீட்டு மோசடியில் கையெழுத்து வைத்திருப்பவரும் தானும் வேறு வேறான நபர்கள் தான் என்று காட்டுவதற்காகத்தான் இத்தகைய மோசடி இடம்பெற்றதோ என்கிற சந்தேகம் பொலிஸாருக்கு வந்திருக்கின்றது.

ஏனெனில் பெயர்ச் சாத்திர முறைக்காக அவரது பெயரை அவர் பின்னர் இலங்கைச் சட்டங்களுக்கு அமைய அவர் மாற்றியிருக்கக்கூடும், ஆனால், அவரது தந்தையின் பெயரையும் எப்படி மாற்ற முடியும்?

எல்லாவற்றையும் வைத்து ஆளை எப்படி உள்ளே தள்ளுவது என்று தலையை குடைந்துகொண்டிருக்கிறார்கள் பொலிஸார்.

மாகாண சபையில் ஒரு அமைச்சுப் பதவியோ நாடாளுமன்ற உறுப்பினர் பதவியோ பெற்றுவிடலாம் என்கிற எதிர்பார்ப்போடு இருக்கின்ற அந்த அரசியல்வாதியின் கனவுகளுக்கு இந்த வழக்கு எப்படியெல்லாம் ஆப்பு வைக்கப்போகிறதோ தெரியவில்லை.

அதற்கிடையில் ஒரு கொசுறு தகவல், ரெலோ தலைவர் செல்வம் வீட்டில் பிஸ்டல் கிடந்து எடுத்தது என்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்த வழக்கில் அவருக்காக வாதாடி அவரைப் பிணையில் எடுத்துவிட்ட மாதிரியே சட்டத்தரணி சுமந்திரன் இந்த அரசியல்வாதியின் வழக்குக்கும் பிணை எடுக்கப்போவாரோ தெரியாது. ஆனால், அவர் செய்யக்கூடியவர்தான் தன்னக்கு எதிராக முழுமையாகச் செயற்படும் பத்திரிகையின் வழக்குகளுக்கே தொழில் தர்மம் என்று கூறிக்கொண்டு வழக்காடும் அவர், இந்த அரசியல்வாதிக்காகப் போகமாட்டார் என்று சொல்லமுடியாது. இவர் என்ன அண்மைக் காலமாகச் சில தடவைகள்தானே சுமந்திரனைக் காட்டமாக விமர்சித்து வந்திருக்கிறார். தொழில்வேறு அரசியல்வேறு தானே வாசகர்களே!

யார் அந்த அரசியல்வாதி என்பதை பிறதொரு தருணத்தில் சொல்கின்றேன்.

- இடிமின்னல் -

## மீள்குடியமர்த்தப்படும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் விடுத்துள்ள விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தபால் வாக்குப் பத்திரத்தை அச்சடிக்கப் பணம் ஒதுக்குவதில்லை என முடிவு செய்ததிலிருந்து மக்களின் இறையாண்மையைக் கொள்ளையடிக்கும் அரசின் புதிய நாடகம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.'

மக்கள்ஆணையற்றஅரசுதேர்தலை நடத்தப் பயந்துபோயுள்ளது. இதன் காரணமாகத் தேர்தலை ஒத்திவைக்கும் சதிகள் இன்னும் முடிந்தபாடில்லை.

22ஆவது முறையாகத் தேர்தலை ஒத்திவைக்கும் மற்றொரு கோழைத்தனமான முயற்சியை அரசு மேற்கொண்டுள்ளது. எவ்வாறாயினும், தேர்தலை ஒத்திவைப்பதற்கான அரசின் தொடர்ச்சியான கூட்டுச் சதிகள் சட்டத்தின் முன் ஒவ்வொன்றாகத் தோற்கடிக்கப்பட்டன.

தேர்தல் என்பது அரசமைப்புச் சட்டத்தின்பிரகாரமமைந்ததேவைப்பாடு. அதை மீற யாருக்கும் அதிகாரம் இல்லை என்பதையும் வலியுறுத்துகிறோம்.

தேர்தல்கள் ஒத்திவைப்பு தொடர்பாக ஒருநாடாகநாம்பல இழிவானவரலாற்று நிகழ்வுகளை அனுபவித்துள்ளோம்., அந்தக் கறுப்பு நிகழ்வுகளை மீண்டும் மேற்கொள்வதற்கான சகல வழிகளும் மூடப்படவேண்டும்.

தேர்தலைஒத்திவைக்கச்சதிசெய்யும் அனைவருக்கும் எதிராக தொடர்ந்து சட்ட நடவடிக்கை எடுத்து சட்டத்தின்முன் உச்சபட்சதண்டனையைவழங்குவோம் எனத் தெரிவித்துகொள்கின்றோம்.

எனவே, மக்களின் ஜனநாயக உரிமைகளை கடுமையாக மீறும் வகையில் தேர்தலை ஒத்திவைப்பது அல்லது நடத்தாமல் இருப்பது போன்ற கோழைத்தனமான அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் அனைத்து சக்திகளும் ஏனைய அனைத்து முற்போக்கு சக்திகளும் ஒரு முகாமில் இணையவேண்டிய நேரம் வந்துவிட்டது.

இது இப்போதைக்கு தட்டிக்கழிக்க முடியாத பொறுப்பாகும். பைத்தியக்கார அரசு மக்களின் இறையாண்மையுடன் விளையாட அனுமதிக்கக் கூடாத தீர்க்கமான தருணம் வந்துவிட்டது என்பதையும் நினைவுபடுத்துகின்றேன் – என்றுள்ளது.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## துணைவேந்தர் பதவி

இந்த செய்தித்தாளில் வெளிவந்த துணைவேந்தர் பதவி குறித்த 27.01.2023 திகதியிடப்பட விளம்பரத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள்/பெயர்மொழிவுகளுக்காக கோரும் விளம்பரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க ரத்து செய்யப்படுகிறது. துணைவேந்தர் பதவிக்கான நியமனம் தொடர்பான செயல்முறை புதிதாக தொடங்கும். மேலதிக விபரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும்;.

**விசுவநாதன் காண்டீபன்.**
**பதிவாளரும் பேரவையின் செயலாளரும்**
**பதிவாளர் அலுவலகம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி.**
**13.02.2023**



சகோதரர்களுக்கு முன்னுரிமையளித்து

# 69 லட்சம் மக்களாணையை மலினப்படுத்தினார் கோட்டா

## விமல் வீரசன்ஸ புத்தளத்தில் சீறல்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது சகோதரர்களுக்கு முன்னுரிமை வழங்கி 69 இலட்சம் மக்கள் வழங்கிய ஆணையை மலினப்படுத்திவிட்டார். அதனால் ராஜபக்ஷக்களுடன் இனியொரு போதும் சேரப்போவதில்லை என நாடாளுமன்ற உறுப் பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

புத்தளத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்ற சுதந்திர மக்கள் கூட்டணியின் அமைப்பாளர் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியாக தீவிரமடையும் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவையில் பல முறை எடுத்துரைத்தோம்.

வெளிநாட்டு கையிருப்பு ஏதும் கிடையாது என முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ அமைச் சரவை தவறாக வழி நடத்தினார்.

பொருளாதார நெருக்கடி இறுதியில் பெரும் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியது. இலங்கை அரசியல் வரலாற்றில் எவருக்கும் நேராத நிலைமை முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவிற்கு ஏற்பட்டது. மக்கள் போராட்டத்திற்கு மத்தியில் உயிரை பாதுகாத்துக் கொள்ள நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் பயணத்தை நாமல் ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் முழுமையாக இல்லா தொழித்துள்ளார்கள்.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசை ராஜபக்ஷகள் குடும்பம் முழுமையாக ஆக்கிரமித்ததால் இரண்டரை வருட காலத்திற்குள் நாட்டில் பெரும் அரசியல் மாற்றம் ஏற்பட்டது.

சுதந்திர மக்கள் கூட்டணி தங்காலைக்கு அல்லது நெலும் மாவத்தைக்கு மீண்டும் செல்லும் என பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆனால் இனியொருபோதும் அது நடக்காது. ராஜபக்ஷகளுடன் சேரப் போவதில்லை. அரசியல் ரீதியில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக ராஜபக்ஷகளுக்கு எதிராக தனித்து அரசியல் கூட்டணியை உருவாக்கியுள்ளோம்.

இடம்பெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவதென்ற பிரச்சினை பொதுஜன பெரமுனவிற்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் உள்ளது.

2019ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியை விமர்சித்து ஆட்சிக்கு வந்த பொதுஜன பெரமுன தற்போது ஐக்கிய தேசியக் கட்சியை முழுமையாகத் தஞ்சமடைந்துள்ளதை 69 இலட்ச மக்கள் எவ்வாறு ஏற்றுக்கொள்வார்கள் என்றார்.

# யாழ். பல்கலையில் கனேடிய தூதவர்





இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான கனேடியத் தூதுவர் எரிக் வல்ஸ் நேற்று திங்கட்கிழமை யாழ்ப் பாணப் பல்கலைக் கழகத்துக்கு வருகை தந்து உபவேந்தரைச் சந்தித்துப் பேசினார். கனேடிய அரசின் நிதியுதவியின் கீழ் யாழ்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடத்தின், மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறையினால் நடத்தப்படும் என்லீப் செயற்றிட்டத்தின் மீளாய்வுக்காகவே கனேடியத் தூதுவர் தலைமையிலான குழு வந்திருந்தது.

இந்த விஜயத்தின் போது, துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் மற்றும் மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி எஸ். கே.கண்ணதாஸ் ஆகியோருடனும், மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறை மாணவர்களுடனும் கனேடியத் தூதுவர் கலந்துரையாடி, நிலைமைகளைக் கேட்டறிந்தார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கேள்விகளை எழுப்பும் அறிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்று மீண்டும் ஒரு தடவை கூறித் திடீரெனப் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறார் தமிழ்நாட்டின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரான பழ நெடுமாறன். அந்தச் செய்தியை அவர் அறிவித்த சமயத்தில் அவரோடு கூடவே ஈழத்துக் கவிஞர் காசி ஆனந்தனும் இருந்தார்.

சமூக ஊடகங்களிலும் அரசியல் மற்றும் ஊடகங்களிலும் பரபரப்பைக் கிளப்பியதாக இந்தச் செய்தி இருந்தது. தஞ்சாவூரில் நெடுமாறன் அமைத்த முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் அவர் செய்தியாளர்களைச் சந்தித்தபோது பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்ற செய்தியை அறிவித்தார்.

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் பற்றிய ஓர் அறிவிப்பை ஈழத்துக் கவிஞர் காசி ஆனந்தன் முன்னிலையில், பல்வேறு தலைவர்கள் முன்னிலையில் அறிவிப்பதில் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன்.

சர்வேதச சூழலும் இலங்கையில் ராஜபக்ஷ ஆட்சியை வீழ்த்தும் அளவுக்கு வெடித்துக் கிளம்பியுள்ள சிங்கள மக்களின் போராட்டங்களும் தமிழீழ தேசியத் தலைவர் வெளிப்படுவதற்கான உகந்த சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

இந்தச் சூழலில் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் மிக்க நலமுடன் இருக்கிறார் என்ற நற்செய்தியை உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்கு உறுதியாகத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். இதுவரை அவரைப் பற்றித் திட்டமிட்டுப் பரப்பப்பட்ட யூகங்களுக்கும் ஐயங்களுக்கும் இது முற்றுப்புள்ளி வைக்கும் என்று நம்புகிறோம்.

தமிழீழ மக்களின் விடியலுக்கான திட்டத்தை அவர் விரைவில் அறிவிக்கவுள்ளார். தமிழீழ மக்களும் உலகத் தமிழர்களும் ஒன்றுபட்டு நின்று அவருக்கு முழுமையான ஆதரவை அளிக்க முன்வருமாறு வேண்டுகிறோம்.

விடுதலைப் புலிகள் வலிமையாக இருந்த காலம் வரை இந்தியாவுக்கு எதிரான நாடுகள் எதையும் தங்கள் மண்ணில் காலூன்ற அனுமதிக்கவில்லை. இந்தியாவுக்கு எதிரான நாடுகள் எதனுடனும் எந்தக் காலகட்டத்திலும் எத்தகைய உதவியையும் பெறுவதில்லை என்பதிலும் பிரபாகரன் மிக உறுதியாக இருந்தார்.

தற்போது இலங்கையில் ஆழமாகக் காலூன்றி, இந்திய எதிர்ப்புத் தளமாக அதை ஆக்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டுள்ளதையும் இந்துமாக்கடலின் ஆதிக்கம் சீனாவின் பிடியில் சிக்கும் அபாயம் இருப்பதையும் எண்ணிப் பார்த்து அதைத் தடுக்கும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இந்திய அரசை வேண்டுகிறோம்.

இந்த முக்கியமான காலகட்டத்தில் தமிழக அரசும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் தமிழக மக்களும் ஒன்றுபட்டு நின்று தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களுக்குத் துணை நிற்குமாறு வேண்டிக்கொள்கிறோம் – என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் பிரதிகளை பிக்குகள் எரித்து, சமஷ்டி தர முடியாது என்று சொல்கிற சமயத்தில் இந்திய மண்ணில் இருந்த இந்த அறிவிப்பு வெளிப்பட்டிருக்கின்றது. இது மறைமுகமாக செய்திகள் எவற்றையாவது சொல்கிறதா, கொழும்புக்கான எச்சரிக்கையா என்பன போன்ற பல கேள்விகளை இது எழுப்பி நிற்கின்றது.

# மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்காவிட்டால் மின் விநியோகம் பெருமளவு பாதிக்கப்படும்

## சபையின் தலைவர் எச்சரிக்கை

மின்சாரக் கட்டணங்களை உடனடியாக அதிகரிக்கவில்லை என்றால் மின்விநியோகம் இன்னும் பெரியளவில் பாதிக்கப்படும் என்று எச்சரித்துள்ளார் மின்சார சபையின் தலைவர். மின் உற்பத்திக்குத் தேவையான எரிபொருள், நிலக்கரி போன்றவற்றைக் கொள்வனவு செய்யமுடியாத நிலையில் மின் உற்பத்தி பெருமளவில் வீழ்ச்சியடையும் என்றும் அவர் தெரிவித்தார்.

திங்கட்கிழமை நடைபெற்ற தேசிய பேரவை கூட்டத்தில் அவர் இந்தக் கருத்தை வலியுறுத்தினார். மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு நாளை புதன்கிழமை கூடிப் பேசி இறுதித் தீர்மானம் எடுக்கவுள்ள நிலையில், அதற்கு முன்னதாக முன்னர் மின்சார சபை மற்றும் ஆணைக்குழு என்பன இது தொடர்பில் கூடி ஆராயுமாறு தேசிய பேரவை அறிவுறுத்தல் வழங்கியது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் தலைமையில் கூடிய தேசிய பேரவைக் கூட்டத்திலேயே இந்த அறிவித்தல் வழங்கப்பட்டது.

மின்சாரக் கட்டணங்களை 60 சதவீதத்தால் அதிகரிக்கவேண்டும் என்று ஆட்சியாளர்கள் கூறுகின்றனர். இது தொடர்பாக அமைச்சர் வைத்த முன்மொழிவுகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. ஆனால் அந்தக் கட்டண உயர்வுகளை அனுமதிக்க முடியாது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் மறுத்துவிட்டார்.

ஆணைக்குழுவின் தலைவரது முடிவு தொடர்பாக ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக ஆணைக்குழு உறுப்பினர்கள் இருவர் பதவி விலகிவிட்டனர். இந்த நிலையில் எஞ்சிய 3 உறுப்பினர்களுடன் ஆணைக்குழு நாளை கூடவுள்ளது. அதன் இறுதி முடிவுக்கு முன்னதாக மின் கட்டண அதிகரிப்பு அவசியம் என்பது தேசிய பேரவைக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மின்சார சபை 60 சதவீத கட்டண அதிகரிப்பு கோரியுள்ள பின்னணியில் தேவையான அளவுக்காவது அதனை அதிகரிக்க அனுமதி வழங்கப்படவில்லை எனின் கடுமையான நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரிடும் என மின்சார சபையின் தலைவர் பேரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

மின் கட்டண அதிகரிப்பு நடக்காவிட்டால் எதிர்காலத்தில் நிலக்கரி, டீசல் என்பவற்றை இறக்குமதி செய்வதற்குக்கூட நிதி இல்லாமல் போகும், அதனால் நீண்ட நேர மின் துண்டிப்புக்குச் செல்லவேண்டிய நிலைமை ஏற்படும் என்று அவர் எச்சரித்தார்.

இந்தக் கூட்டத்தில் குறுகிய, மத்திய மற்றும் நீண்டகால தேசியக் கொள்கைகளைத் தயாரிக்கும்போது முன்னுரிமைகளை அடையாளம் காண தேசிய பேரவையினால் நியமிக்கப்பட்ட உப குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் உப குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தேசிய பேரவைக்கு விளக்கமளித்தார்.

இதுதொடர்பில் எண்ணக்கருப் பத்திரத்தை தயாரித்து முடித்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

# தடையற்ற மின்சார விநியோகத்துக்கு கட்டண அதிகரிப்பு தவிர வழியில்லை

## அமைச்சர் காஞ்சன திட்டவட்டம்



நாட்டில் தடையற்ற மின் விநியோகத்தை மேற்கொள்வதென்றால் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்கிறார் மின்சக்தி மற்றும் வலுசக்தித்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர.

மாத்தறை மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், வேட்பாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார் அவர்.

தேர்தல் காலத்தில் நாட்டில் பெரும் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதற்கான குறுகிய அரசியல் நோக்கங்களில் சில குழுக்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றும் குற்றஞ்சாட்டினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மின் கட்டணம் அதிகரிக்கப்படுகின்றமையை நானும் முற்றாக எதிர்க்கின்றேன். கடந்த ஆட்சி காலங்களில் பல ஆண்டுகளாக எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்கள் எடுக்கப்படாமையின் காரணமாகவே இன்று இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நிர்மாணிக்கப்படவிருந்த சாம்பூர் மின் உற்பத்தி நிலையத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் காரணமாகவே கடந்த ஆண்டு 8 மணித்தியாலங்கள் வரை மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்த வேண்டியேற்பட்டது. அது அமைக்கப்பட்டிருந்தால் குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்கியிருக்க முடியும். எனவேதான் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்து பல்வேறு கடினமான தீர்மானங்களை நாம் நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம்.

தற்போது உயர்தர பரீட்சை காலத்தில் தடையின்றி மின்சாரத்தை வழங்காமையின் காரணமாக எம் மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் நாம் கடந்த நவம்பர், டிசெம்பர் மாதங்களிலேயே தடையற்ற மின் விநியோகத்திற்கான திட்டமிடலை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் வழங்கினோம்.

அமைச்சரவைக்கும் அந்த செயற்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. கடந்த வருடத்தைப் போன்று நீர் மின் உற்பத்தியை முழுமையாகப் பயன்படுத்திவிட்டால் மார்ச், ஏப்ரலில் 5 மணித்தியால மின் துண்டிப்பிற்கு செல்ல நேரிடும். எனவேதான் தற்போது நாம் அதனை முகாமைத்துவம் செய்து கொண்டிருக்கின்றோம்.

மார்ச் 9ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனை அடிப்படையாகக் கொண்டு மார்ச் 8 மற்றும் 9ஆம் திகதிகளில் நாட்டில் பெரும் பிரச்சினைகளை தோற்றுவிப்பதற்கு ஒரு சில குழுக்கள் முயற்சிக்கின்றன.

சில ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள் கூட இந்த அரசியல் நோக்கங்களுக்கு துணை போகின்றனர். எவ்வாறிருப்பினும் கட்டணத்தை அதிகரித்தால் மாத்திரமே தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்க முடியும் – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை போதை வியாபாரி கைது ட்ரோன், ஸ்கானர் கருவிகளும் மீட்பு







கல்முனையில் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் முக்கிய நபரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். அவருடன் பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். அவர்களிடமிருந்து நவீன ட்ரோன் மற்றும் ஸ்கானர் கருவிகள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர் 33 வயதான போதைப்பொருள் வியாபாரி வெள்ளையன் என அழைக்கப்படும் முஹமட் ஹனீபா அர்சாத் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டபோது அவரிடமிருந்து 5.14 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் ஜனவரி 13ஆம் திகதி வீதியில் சென்ற பாடசாலை மாணவனை வாகனம் ஒன்றினால் மோதிய பின்னர் தலைமறைவாகி இருந்த நிலையில் பொலிஸாரினால் தேடப்பட்டு வந்தார்.

அக்கரைப்பற்று நிந்தவூர் கல்முனை பெரிய நீலாவணை மருதமுனை சம்மாந்துறை பகுதிகளுக்கு போதைப் பொருட்களை விநியோகிக்கும் பிரதான வியாபாரி இவரே என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபரின் கல்முனை மற்றும் சாய்ந்தமருது பகுதியில் உள்ள வீடுகளில் பொலிஸார் மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனையில் ஈடுபட்டனர். அவரது சகோதரியின் வீடும் சோதனைக்குள்ளாக்கப்பட்டது.

இந்தச் சோதனையின்போது அர்சாத்தின் சகோதரன் மற்றும் சகோதரியையும் பொலிஸார் கைது செய்தனர்.

இந்தச் சேதனையில் ஒரு தொகுதி போதைப்பொருட்கள், 2 அதி நவீன ஸ்கேனர்கள், சிசிரிவி டிவீஆர், பதிவு செய்யப்படாத ட்ரோன் பறக்கும் சாதனம் உள்ளிட்டவைகள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

## சாரதிக்கு மாரடைப்பு மோதி நின்ற பஸ்

மின்னேரிய பஸ் நிலையத்திலிருந்து ஹிங்குராக்கொட நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று விபத்துக்குள்ளான சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது. பஸ்ஸின் சாரதிக்கு ஏற்பட்ட திடீர் மாரடைப்பே விபத்துக்குக் காரணம் எனத் தெரிய வந்துள்ளது.

வீதியில் சென்று கொண்டிருந்த பஸ் திடீரென வீதியை விட்டு விலகி கடை ஒன்றின் மீது மோதிய காட்சிகள் அங்கிருந்த சிசிரிவி கமெராவில் பதிவாகியுள்ளன.

மாரடைப்புக்குள்ளான குறித்த பஸ்ஸின் சாரதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் ஏற்கனவே இறந்துவிட்டார் எனத் தெரிய வந்ததுள்ளது. 75 வயதான என்.கே. ஆரியரத்ன என்ற சாரதியே மரணமானவராவார்.

## கண்டனம்



உயிரிழந்த திமிங்கிலத்தின் மீது சிறுவர்கள் ஏறி நிற்கும் படங்கள் சமூக ஊடங்களில் வெளியாகியுள்ள நிலை யில் அதற்கு கடும் எதிர்ப்பு வெளியாகியுள்ளது.

கல்பிட்டியில் உயிரிழந்த திமிங் கிலங்கள் மீது சிறுவர்கள் ஏறி நிற்கும் படங்களுக்கே கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

உயிரிழந்த திமிங்கிலங்கள் மீது சிறுவர்கள் ஏறி நிற்பதையும் அதனை பெரியவர்கள் பார்ப்பதையும் காண்பிக்கும் படங்கள் வெளியாகியுள்ளன.

சில சிறுவர்கள், இறந்தநிலையில் காணப்படும் திமிங்கிலங்களின் உடற்பாகங்களை இழுத்து விளையாடு வதைக் காண்பிக்கும் படங்களும் வெளியாகியுள்ளன. யுவதியொருவர் திமிங்கிலத்தின் மீது அமர்ந்திருக்கின்றார்.

இறந்த நிலையில் காணப்படும் திமிங்கிலத்துடன் செல்பி எடுத்துக் கொண்டமையும் சமூக ஊடகங்களில் கடும் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது.

## பொலிஸாரின் வேண்டுகோள்!

யாசகம் செய்வதற்கு சிறுவர்கள் பயன்படுத்தப்பட்டால் அது தொடர்பில் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் சிறுவர் யாசகம் செய்யும் சம்பவங்கள் வழமையாக பதிவாகி வருகின்றன எனத் தெரிவித்த அவர், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் யாசகம் எடுப்பதற்கு அதிக வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## கிணற்றில் வீழ்ந்து 4 வயது சிறுவன் சாவு

கரந்தெனிய மஹகொட பிரதேசத்தில் பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்து நான்கு வயதான சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

கரந்தெனிய மஹகொட பிரதேசத்தைச் சேர்ந்த மினோத் மன்சன என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

சிறுவனைக் காணவில்லை என பிரதேசவாசிகள் தேடிய நிலையில் கிணற்றை சோதனையிட்டபோது சடலம் அங்கு காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.




காலைக்கதிர் Kalaikkathir

# கழிவு முகாமையின் அவசியம்

- ஜெபராஜ் ரெகோபாயம் -



கழிவு என்பது உண்மையில் ஒரு வளம் இது ஒவ்வொரு நபரின் பார்வைக்குத் தக்கதாக வளமாகவும் பிரச்சினையாகவும் காணப்படுகின்றது இருப்பினும் பல வளர்ச்சி அடைந்த, அடையாத மற்றும் வளருகின்ற நாடுகளில் கழிவு என்பது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்து வருகின்றது.

பொருளாதார மேம்பாடு, வாழ்க்கைத்தர உயர்வு, வர்த்தக கைத்தொழில் பெருக்கம் மற்றும் பரம்புகை போன்றன தற்போது அதிக கழிவுகளை சூழலில் சேர்க்கின்றன. இவற்றில் வர்த்தக மற்றும் கைத்தொழில் கழிவுகளே அதிகம். இவ்வாறு மனித நடவடிக்கைகளின் போது வெளியேற்றப்படுகின்ற கழிவுகளை முகாமைத்துவம் செய்யவேண்டியது அவசிய மாகின்றது.

மாசுபடிந்துகொண்டிருக்கும் தற்போதய சூழலை பாதுகாத்தல் மற்றும் வீணான விரயத்ததைத் தவிர்த்து மேலதிக நுகர்வை கட்டுப்படுத்தல் போன்றன ஒவ்வொருவரினதும் கடப்பாடுகளாக உள்ளன. எனவே இதற்கு சமூகத்திலுள்ள ஒவ்வொரு தனியன்களுக்கும் கழிவு தொடர்பான புரிந்துணர்வு மிகவும் தேவையான ஒன்று.

கழிவு (waste) என்கின்ற பதத்தினை வரையறுக்கின்றபொழுது சட்டரீதியான ஏற்பாடுகளினால் அப்புறப்படுத்தப்படவேண்டியதோ அல்லது அப்புறப்டுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட மற்றும் பொதுவாக அப்புறப்படுத்தப்படவேண்டிய திண்ம அல்லது திரவப் பொருட்களாகும். (UNDP - 2004).

அடிப்படையில் கழிவுகள் மூன்று வகைப்படும் திண்மம் (பாவித்த பிளாஸ்ரிக் போத்தல்), திரவம் (குளியலறை கழிவு நீர்), மற்றும் வாயு (வாகனங்களின் புகை) என்பனவாகும்.

வெளியேற்றப்படுகின்ற கழிவுகள் முகாமைத்துவத்திற்கு உட்படாமல் சுற்றுச்சூழலுக்கு நேரடியாக விடப்படுகின்றபொழுது எதிர்மறையான பாதிப்புக்களான நீர் மாசடைதல், காலநிலை மாற்றம், வளி மாசடைதல், நிலம் மாசடைதல், மற்றும் மனித ஆரோக்கியத்துக்கு பாதிப்பு என்பனவற்றை தோற்று



விக்கின்றன. அதாவது இரசாயனத்தன்மையானதும் ஆபத்தான நச்சுத்தன்மையானதுமான திண்ம திரவக் கழிவுகள் மழை நீருடன் மேற்பரப்பில் அடித்துச்செல்லப்பட்டோ அல்லது உத்தேசமாக குளம், நீர் மற்றும் ஆறு போன்ற நீர்நிலைகளில் கொட்டப்படுவதனாலோ மேற்பரப்பு நீர் மாசாக்கம் நடைபெறுகின்றது. அதுமட்டுமல்லாது குறிப்பாக பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுகள் நிலத்தினுள் தேங்கி நின்று மழைநீரை மண்ணினுள் உட்புகவிடாமல் நிலத்தடிநீர் மீள் நிரம்புகைக்குத் தடையாக இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

மலசலகூட கழிவுகளினாலும் நிலத்தடி நீர் மாசடைகின்றது.பொதுவாக மலசலகூட கழிவுகளில் இ – கொலி (E - coli) மற்றும் கொலிபோர்ம் (Coliform) போன்ற பக்றீயாக்கள் காணப்படும்.

ஆகவே அடிப்பகுதி மூடப்படாத நிலையில் (bottomless pit) காணப்படும் மலசலகூடக் குழிகள் நிலத்துடன் நேரடித்தொடர்பைக் கொண்டிருப்பதனால் நிலத்தடிநீருடன் மலக்கழிவுகள் கலந்து மேற்குறிப்பிட்ட பக்ரீயாக்கள் நிலத்தடிநீருடன் சேருகின்றன. உதாரணமாக யாழ்ப்பாணகுடா நாட்டு நிலத்தடிநீர் இவ்வாறு மாசுபட்டிருப்பதாக பல்வேறு ஆய்வுகள் வெளிவந்துள்ளன.

இதேபோன்று வளி மாசடைதல் மற்றும் கால நிலை மாற்றமும் நேர்மறையான விளைவுகளில் ஒன்றாகும். வர்த்தக கைத்தொழில் செயற்பாடுகளில் பயன்படுத்தப்படுகின்ற இயந்திரங்களினாலும் கழிவுகளை எரிக்கப்படுவதினாலும் வெளியிடப்படுகின்ற புகை மற்றும் உக்கக்கூடிய கழிவுகள் அழுகுகின்றபொழுதும் வெப்பத்தை அதிகளவில் தக்கவைக்கக்கூடிய காபனீர்ரொக்சைட், மிதேன், காபன்மொனோக்சைட்டு போன்ற பச்சை வீட்டு வாயுக்கள் மற்றும்; தூசு துணிக்கைகள் வளிமண்டலத்துக்கு விடப்பட்டு வளியினை மாசுபடுத்துகின்றது.

குறிப்பாக இவ்வாயுக்கள் புவியினால் வெளியிடப்படுகின்ற வெப்பத்தை உறிஞ்சி தக்கவைத்து சூழலின் சமனிலையை குழப்பி வழமையான கால நிலையை வழமைக்கு மாறாக மாற்றுகின்றன.





கழிவுகள் உக்குகிறபொழுது மிதேன், நைட்ரோ ஒக்சைட் போன்ற வாயுக்கள் வெளியிடப்படுகின்றன இவைகள் ஏனைய பச்சைவீட்டு வாயுக்களைவிட குறைந்த வீதமாக வளிமண்டலத்தில் இருந்தாலும் அதிகளவு வெப்பத்தை தக்கவைக்கக்கூடியதாக காணப்படுகின்றன. இவ் விளைவு (global warming) பூகோள வெப்பமயமாதலுக்கும் தொடர்ந்து கால நிலை மாற்றத்துக்கும் வழிவகுக்கின்றது. தற்போது நாம் எதிர்கொள்கின்ற மழை இல்லாமை அல்லது குறுகிய காலத்தில் அதிக மழை, வெள்ளம், வறட்சி, அதிக வெப்பம், சூறாவளி போன்றவற்றுக்கு இவைகளே காரணமாகின்றன.

தொடர்ந்து நிலம் மாசடைதல் தொடர்பாக நோக்கும்போது வர்த்தக கைத்தொழில் செயற்பாடுகளின் போது அகற்றப்படுகின்ற ஆபத்தான மற்றும் நச்சுதன்மையான பெற்றோலியப் பொருட்கள், ஈயம், காரீயம் போன்ற பார உலோகங்கள் செறிந்த பொருட்கள், கிருமிநாசினி, பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் போன்றவற்றை எரித்தல் நிலமேற்பரப்பில் கொட்டுதல் அல்லது புதைத்தலினால் நிலம் தன் கனிமமான வளத்தினை இழக்கின்றது. இது மட்டுமல்லாது நிலத்தின் வாழுகின்ற சூழலுக்கு நன்மைதரக்கூடிய உயிரிகளும் அழிவடைகின்றன. இந்நிலை எதிர்காலத்தில் நிச்சயமாக நாம் வாழும் சூழலை வாழத்தகாத நிலைக்கு மாற்றும் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை.

கழிவுகளால் பல வழிகளில் மனிதனுடைய ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கப்படுகின்றது. அகற்றப்படுகின்ற இராசாயனங்கள் மற்றும் உலோகங்கள் நிலம் மற்றும் நீரினூடே மனிதனுடைய உணவுச் சங்கிலியில் கலந்து புற்றுநோய் மற்றும் தோல் வியாதிகளை ஏற்படுத்துகின்றது. மாசடைந்த வளி சுவாச நோய்களுக்கும் அசௌகரியங்களுக்கும் வித்திடுகின்றன. இதற்கு சிறந்த உதாரணமாக உலகிலேயே மாசுபட்ட நகரங்களில் முதன்மை நகரமாக இந்தியாவின் புது டெல்லி பெயரிடப்பட்டுள்ளமையாகும். இங்கு சுவாசிப்பதற்கு மக்கள் அசௌகரியப்படுகிறார்கள் ஆகவே இந் நிலமையை சரிசெய்ய சுவாசிக்கும் சிலிண்டர்களை அந்நாடு பொருத்தி வருகிறது.

ஆகவே இலவசமாய் கிடைக்கின்ற வளத்தை முறையான வள முகாமைத்துவம் மற்றும் அது பற்றிய விழிப்புணர்வு இல்லாமையால் இழக்கின்றோம் என்பது மனிதகுலம் கவலைப்படவேண்டியதும் கவனிக்கவேண்டியதுமானதுமான விடயமாகும் ஆகும்.





# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம்
# பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





## FULL OPTION

| MAIN DIHES | DESSERT | BEVERAGES |
|---|---|---|
| Vegitable Fried Rice with Panner & Ghee - 900/= | ice Cream Cup - 60/= | jUICE 200 ml - 70/= |
| Chiken Fried Rice with Vegetable - 1100/= | Fruit Salad - 60/= | Milk Drink - 70/= |
| Kothu Rotty With Vegitable in Indian Style | I ce Cream & Fruit Salad - 100/= | Cocacola M - 70/= |
| | Cream Caramel - 120/= | Pepsi M - 70/= |
| | | Swchpees Tin - 250/= |
| | | Coca Cola Tin - 250/= |

SPECIAL MENU PACKAGE

காலைக்கதிர் Kalaikkathir

## புலிகள் கேட்டது .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி:- சமஷ்டி ஆட்சி முறைமையை நீங்கள் கேட்கிறீர்கள். இதனால் தனி நாடு கேட்கிறீர்கள் என்று சிங்கள மக்கள் கூறுகின்றார்கள். உண்மையில் சமஷ்டி ஆட்சி முறைமை என்பது என்ன?

பதில்:- ஒற்றுமை என்பதுதான் சமஷ்டி முறைமை. அந்தந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் ஒன்றிணைந்து ஆட்சி அமைக்கும்போது அது சமஷ்டி. உதாரணத்துக்கு 10 ஏக்கர் நிலத்தில் தாய் வீடு ஒன்று இருக்கின்றது. அந்த வீட்டில் நான்கு பிள்ளைகள். அவர்கள் ஒருவருக்கும் தனித்தனியாக நிலம் பிரித்துக் கொடுக்கப்படுகின்றது. அவர்கள் அதில் வீடு அமைத்து விரும்பிய பயிர்களைச் செய்து வாழ்கின்றார்கள். ஆனால், தாய் வீட்டில் தாய், தந்தை இருப்பார்கள்.

இந்த நான்கு பிள்ளைகளும் தனித்தனியாக வீடு அமைத்துத் தோட்டம் செய்து வந்தாலும் நால்வரும் தாய் வீட்டுக்குச் சொந்தக்காரர்கள். அதுதான் சமஷ்டி. இந்த விடயத்தில் தெற்கில் வேறாகவும் வடக்கில் வேறாகவும் நடத்துகின்றார்கள்.

மாகாண சபையில் தெற்கில் இருக்கும் முதலமைச்சர்கள் நிதியை வைத்திருக்க முடியும். வடக்கு முதலமைச்சராக நான் இருந்தபோது அந்த உரிமை எனக்கு வழங்கப்படவில்லை.

வடக்கில் ஏதாவது பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கும்போது ஏதாவது காரணத்தைச் சொல்லி தடை விதிக்கிறார்கள்.

ஆனால், அதிகாரம் எங்களிடம் இருந்தால் நாங்கள் அதைச் செய்து கொள்வோம். இதற்காகத்தான் சமஷ்டியைக் கேட்கின்றோம்.

கேள்வி:- நீங்கள் பொலிஸ் அதிகாரம் கேட்பது ஏன்?

பதில்:- அங்கே சிங்கள பொலிஸார்தான் இருக்கின்றார்கள். இதனால் மொழிப் பிரச்சினை ஏற்படுகின்றது. ஒருவர் பொலிஸ் நிலையம் சென்று தமிழில் முறைப்பாடு பதிவு செய்கின்ற போது சிங்களத்தில் ஒருவர் மொழி பெயர்த்துச் சொல்கின்றார்.

இதனால் இவர் கூறிய அத்தனை விடயங்களும் திரிவுபடுத்தப்படுகின்றன. இதனால் முறைப்பாட்டாளர் பாதிக்கப்படுகின்றார்.

கேள்வி:- இதுபோன்ற சிறிய நாட்டுக்குள் சமஷ்டி தேவைதானா?

பதில்:- சுவிஸ்டார்லாந்த் இலங்கையில் மூன்றில் ஒரு பங்கு. அங்கு பத்து மக்கள் பிரிவுகள் உள்ளனர். அவர்கள் அவர்களை அவர்களாவே நிர்வகிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த நாடு துண்டு துண்டாகப் பிரிந்து செல்லவில்லை.

அங்கு 20 மாகாணங்கள் உள்ளன. இங்கு இருப்பதோ ஒன்பது. அந்த நாட்டால் இது முடியும் என்றால் ஏன் இலங்கையால் முடியாது? நாம் நாட்டைப் பிரிக்கச் சொல்லவில்லை. அதிகாரத்தைத்தான் பகிரச் சொல்கின்றோம்.

கேள்வி:- நீங்கள் கேட்பது புலிகள் கேட்ட தமிழீழம் போன்றதா?

பதில்:- இல்லை. அவர்கள் கேட்டது தனியான ஒரு நாடு. நாம் கேட்பது அப்படியல்ல. நாட்டைப் பிரிக்காமல் அதிகாரத்தை மட்டும் பகிர்ந்து கேட்கின்றோம்.

அமரிக்கா, கனடா, இந்தியா போன்ற நாடுகள் சமஷ்டி ஆட்சி முறைமையைக் கொண்ட நாடுகள். அவை தனிநாடாகப் பிரியவில்லை. ஆனால், இந்த சமஷ்டி முறைமையை தனி நாடு என்றே எல்லோரும் எண்ணி இருக்கின்றார்கள்.

## மாநகர சபையில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தைச் சமர்ப்பித்த போது, அதன் முதலாவது சமர்ப்பணத்தின் போதே அது தோற்கடிக்கப்பட்டது. அதனால் முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குள் வரவு செலவுத் திட்டத்தை இரண்டாவது தடவை சமர்ப்பிக்காமல் தனது பதவியிலிருந்து விலகினார்.

அதன் பின்னர், புதிய முதல்வராக ஜனவரி 20 ஆம் திகதி தற்போதைய முதல்வர் இ. ஆனோல்ட் உள்ளூராட்சி ஆணையாளரால் அறிவிக்கப்பட்டிருந்தார். அன்றைய நாளிலிருந்து 14 நாட்களுக்கு புதிய முதல்வர் வரவு - செலவுத்திட்டம் அங்கீகரிக்கப்படாமலே, அத்தியாவசிய செலவுகளை மேற்கொள்வதற்கு ஆளுநர் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதிகாரமளித்திருந்தார்.

இந் நிலையில், புதிய முதல்வரின் வரவு - செலவுத் திட்டம் இன்று சபை அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளது. 45 உறுப்பினர்களைக் கொண்ட யாழ்ப்பாணம் மாநகர சபையில் எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைக் கொண்டதாக இல்லை. காலத்துக்குக் காலம் ஏற்படுகின்ற இடைக்காலக் கூட்டுகளே ஆட்சி அதிகாரத்தைத் தீர்மானித்து வந்தன. கடந்த வாரம் ஒரு உறுப்பினர் விபத்து காரணமாக உயிரிழந்திருப்பதனால் உறுப்பினர் எண்ணிக்கை 44 ஆகியுள்ளது.

இவர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அங்கம் வகிக்கும் 16 பேரில் ஓர் உறுப்பினர் மணிவண்ணன் அணியின் உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளராகக் களமிறங்கியிருப்பதனால், கடைசியாக இடம்பெற்ற முதல்வர் தெரிவுக்கான வாக்கெடுப்பில் அவர் பங்குபற்றவில்லை. மீதமுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 15 உறுப்பினர்களில் மூவர் புளொட் சார்பாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள், மூவர் ரெலோ சார்பாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள். இவர்களும் தற்போது தனித்து நிற்கும் காரணத்தால் நாளைய வாக்கெடுப்பில் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கப் போகிறார்கள் என்பது இதுவரை தெரிய வரவில்லை.

நிச்சயமாக எதிர்பார்க்கப்படும் 12 உறுப்பினர்களோடு, ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்று உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஓர் உறுப்பினர், ஈ.பி.டி.பி. அதிருப்திக் குழுவின் ஓர் உறுப்பினர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினர் என 18 உறுப்பினர்கள் மட்டுமே வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மணி அணியின் பத்து உறுப்பினர்கள் மற்றும் ஈ.பி.டி.பியின் 13 உறுப்பினர்கள் நிச்சயமாக வரவு - செலவுத் திட்டத்தை எதிர்ப்பார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. இத்துடன் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் மூன்று உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கு பற்ற மாட்டார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், அனைத்து உறுப்பினர்களும் வருகை தந்து, வாக்கெடுப்பில் பங்குபற்றினால் ஆனல்ட் தோல்வியடையும் சாத்தியக்கூறுகளே அதிகம் காணப்படுகின்றன.

ஆனாலும், முதல்வர் தெரிவு சட்ட விரோதமானது என்றும் முதல்வரை இடைநிறுத்த வேண்டும் எனவும் இடைக்காலத் தடை கோரி நீதிமன்றத்தை நாடியுள்ள மணிவண்ணன் அணியினர்

(09ஆம் பக்கம் பார்க்க)

# மரண அறிவித்தல்



## சரவணமுத்து பாலசுப்பிரமணியம்

**மண்ணில்- 1940.10.31**
**விண்ணில் - 2023.02.12**

மாதகலைச் சேர்ந்த சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் வவுனியா, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து பாலசுப்பிரமணியம் அவர்கள் (2023.02.12) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான சிவகுரு, பரஞ்சோதி தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் தயாபரன் (டுபாய்) இன் அன்புத் தந்தையும், ஜயந்தியின் (கனடா) பாசமிகு மாமனாரும், திலக்ஷனின் (கனடா) அன்புப் பேரனும், காலஞ்சென்ற தணிகாசம், பரராஜசிங்கம் (அமெரிக்கா) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற நாகபூசணி மற்றும் விஜயா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள ஈசன் மலர்சாலையில் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகளுக்காக கோம்பயன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் - குடும்பத்தினர்

தொலைபேசி இல - 077 304 4212
072 403 6422 (வட்சப்)
+971526396467

காலைக்கதிர் Kalaikkathir

### மாநகர சபையில் .......

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய வாக்கெடுப்பில் கலந்து கொண்டு, எதிர்தே தான் வாக்களித்தாலும், முதல்வர் தெரிவை அவர்கள் சட்ட விரோதமானது என சவாலுக்குட்படுத்தியிருப்பது கேள்விக்குறியாகி விடும். எனவே அவர்களின் 10 உறுப்பினர்களும் சபைக்குச் செல்லாமல் விடுவதற்கான சந்தர்ப்பங்களும் அதிகம்.

எனவே வாக்களிப்பில் கலந்து கொள்பவர்களில் பெரும்பான்மையினரின் – 18 வாக்குகளைப் பெற்று வரவு–செலவுத்திட்டம் ஏற்றுக்கொள்ளப் படவும் வாய்ப்புகள் அதிகம். ஆனல்டை அகற்றுவதுதான் ஒரே நோக்கம் என்று கொண்டு மணிவண்ணன் அணியினர் கூட்டத்திற்கு வந்தால் ஆனல்ட் தோற்கும் வாய்ப்புகள் அதிகரிக்கும்.

### அரச படையினரால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டிருந்தபோது தவறுதலாகத் துப்பாக்கி வெடித்ததில் பெண் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புப் படை உறுப்பினர் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் வனத்தமுல்ல தொடர்மாடிக் குடியிருப்பில் பெண் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் குறித்த மேலதிக விவரங்களைப் பொலிஸார் வெளியிடவில்லை.

### சலுகைகள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்போக அறுவடை நெல்லை கிலோ ஒன்று 100 ரூபாய்படி கொள்வனவு செய்யவும் அனுமதி வழங்கியுள்ள அமைச்சரவை அதிலிருந்தே இலவச அரிசியை வழங்குவதற்கும் தீர்மானித்துள்ளது.

அரச பணியிலிருந்து ஓய்வு பெற்ற 18 ஆயிரம் பேருக்கு வழங்கப்படவேண்டியுள்ள பணிக்கொடை நிலுவைத் தொகையை உடனடியாக வழங்குவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது, 2022 ஏப்ரல் மாதம் முதல் தமது நிலுவைத் தொகைக்காகக் காத்திருக்கும் ஓய்வூதியர்களின் குடும்பங்களுக்கு பெரும் சுமைத் தணிப்பாக இருக்கும் என்று அரசதலைவர் ஊடகப் பிரிவு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நாட்டில் போசாக்குக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கும் விளிம்பு நிலை மக்களுக்கும் உதவும் வகையில் பெண்கள், சிறுவர் விவகார, சமூக மேம்பாட்டு அமைச்சின் முன்மொழிவுகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக கர்ப்பிணித் தாய்மாருக்கான மாதாந்தக் கொடுப்பனவு, உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்பவர்கள் முதியவர்கள் விசேட தேவையுள்ளவர்கள் ஆகியோருக்கான மாதாந்த உதவித் தொகை, சிறுநீரக நோயாளிகளுக்கான நிதி உதவி ஆகியவற்றைத் தொடர்ந்து வழங்குவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சமுர்த்தி உதவி பெறுபவர்களுக்கு அவை தாமதமின்றிக் கிடைப்பதை உறுதிப்படுத்தவும் அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளது.

இந்த நடவடிக்கைகள், உதவி தேவைப்படுபவர்களுக்கு அவற்றை உடனடியாக வழங்குவதையும், பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் எதிர்கொள்ளும் துன்பங்களைப் போக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன என்று அரச தலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்தது. அனைத்து குடிகளினதும், குறிப்பாக மிகவும் தேவையுடையவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு அரசு அர்ப்பணிப்புடன் உள்ளது என அந்த அறிக்கை மேலும் கூறுகின்றது.

அத்துடன் அத்தியாவசிய மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு முன்னுரிமையளிப்பதற்கும் தேவையான நிதியை சுகாதார அமைச்சுக்கு ஒதுக்குவதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது

# போராட்டக்காரர்களே ரணிலை அரியணையில் ஏற்றினார்கள்

## 'மொட்டு'க்குத் தொடர்பில்லை என்கிறார் பஸில்



ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்கியது போராட்டக்காரர்களே. அதனூடாகவே அவர் ஜனாதிபதி கதிரையில் அமர்ந்தார். போராட்டக்காரர்களின் கோரிக்கையைக் கோட்டாபய கனகச்சிதமாக நிறைவேற்றினார். இதற்கும் மொட்டுக் கட்சியினருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்கியது மொட்டுக் கட்சியினர் அல்லர். போராட்டக்காரர்களே அவரைப் பிரதமராக்கினார்கள். அவர்கள்தான் மஹிந்த பிரதமர் பதவியில் இருந்து விலக வேண்டும் எனவும், எதிர்க்கட்சியில் இருந்து ஒருவர் பிரதமராக நியமிக்கப்பட வேண்டும் எனவும் கோரினார்கள்.

நாங்கள் மஹிந்தவே பிரதமராக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தோம். மஹிந்தவைத் தவிர வேறுஎவரையும் பிரதமராக நியமிப்பதற்கு நாங்கள் விருப்பம் இல்லை என்று உறுதியாகக் கூறினோம். ஆனால், கோட்டாபய அவரது விருப்பத்தின்படி ரணிலைப் பிரதமராக நியமித்தார்.

மஹிந்தவுக்கு மக்கள் ஆணை இல்லை. அவரைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்குங்கள் என்று கோட்டாவுக்கு கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது. அதனால்தான் அவர் ரணிலைப் பிரதமராக நியமித்தார்.

அவர் பிரதமராக நியமிக்கப்பட்டமைக்கும் பின்னர் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டமைக்கும் எங்களுக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை.

பின்னர் நாடாளுமன்றின் ஊடாக ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய தேவை வந்தபோது அப்போதைய வேட்பாளர்களை ஆராய்ந்து பார்த்து ரணிலை ஜனாதிபதியாக்குவதற்கு நாம் முடிவெடுத்தோம்.

மஹிந்தவைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கியமை பிழை. அவர்தான் இப்போதும் பிரதமராக இருந்திருக்க வேண்டும் – என்றார்.

### ஆனல்ட்டின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நேற்று இடம்பெற்ற இந்த வழக்கில் மாநகர சபை மற்றும் மாநகர ஆணையாளர் தரப்பில் சட்டத்தரணி சசிரேகாவும் மாநகர முதல்வர் உட்பட 23 உறுப்பினர்கள் சார்பில் சட்டத்தணிகளான எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்டோரும் மன்றில் முற்பட்டிருந்தனர். வழக்காளர் மற்றும் மேலும் 10 உறுப்பினர்கள் சார்பில் சட்டத்தணிகளான குருபரன், மணிவண்ணன், திருக்குமரன் உட்பட ஐவர் முற்பட்டிருந்தனர்.

நேற்றைய விளக்கத்தின்போது வழக்காளர் மற்றும் முன்னாள் முதல்வர் சார்பில் இணைக்கப்பட்ட நகர்த்தல் பத்திரத்துடனான சத்தியக் கூற்றுகள் தொடர்பான விவாதம் இடம்பெற்றதோடு அதில் முன்னுக்குப் பின் முரணாக இருப்பதனால் இடைக்கால தடையினை வழங்ககூடாது எம்.ஏ.சுமந்திரன் வாதிட்டார். அத்தோடு, கூட்டத்தில் 24 பேர் கலந்துகொண்டதாகக் கூறப்படும் கூட் டத்தின் வரவேடு என வாதிகள் தரப்பில் இணைக்கப்பட்ட ஆவணத்திலேயே 31 உறுப்பினர்கள் ஒப்பமிட்டுள்ளனர். அப்படிப்பட்ட நிலையில் கூட்டத்திற்கு நிறைவெண் போதாது என்பது எப்படி ஏற்புடையதாகும்? என்றும் கேள்வி எழுப்பினார்.

எதிர்த் தரப்பினர் தொடர்ந்தும், அரசின் சுற்றறிக்கைகளை முன்வைத்து, அவற்றின் அடிப்படையில் ஆனல்ட் போட்டியிட அனுமதித்தமையே செல்லுபடியாகாது என்று வாதிட்டனர். ஆனால், அதனை மறுத்த அரச சட்டவாதி, அந்த அறிக்கைகள் சுட்டும் விடயங்களை நீதிமன்றத்திற்குத் தெளிவுபடுத்தினார்.

இவற்றினை ஆராய்ந்த மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் இந்த வழக்குத் தொடர்பான எழுத்து மூல சமர்ப்பணத்தை பிரதிவாதிகளின் சட்டத்தரணி 20ஆம் திகதியும் வாதிகள் தரப்புச் சட்டத்தரணிகள் 22ஆம் திகதி சமர்ப்பிக்க வேண்டும் எனக் கட்டளையிட்டதுடன். எதிர்வரும் மார்ச் 7ஆம் திகதி இது தொடர்பில் மன்று கட்டளை வழங்கும் என்று அறிவித்து வழக்கை ஒத்திவைத்தார்.

### பிரெஞ்சு தூதுவருடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஊடகப்பேச்சாளர் குருசாமி சுரேந்திரன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

உத்தியோகபூர்வமான இந்தச் சந்திப்பில் நாட்டின் தற்போதுள்ள அரசியல் மற்றும் பொருளாதார சூழ் நிலைகள் சம்பந்தமாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

### யாழ்ப்பாணத்தில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற அவர்கள் கொழும்பில் உள்ள தூதரகத்தையே நாடவேண்டியிருக்கின்றது. இது அதிக பணச்செலவையும் அலைச்சலையும் கொண்டது. அதனால் கனேடிய தூதரகத்தின் துணைத் தூதரகம் ஒன்றை அல்லது அலுவலகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைக்க வேண்டும் என்று முதல்வர் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த கனேடியத் தூதுவர் கனேடிய நாட்டின் அலுவலகம் தொடர்பில் பரிசீலிக்கலாம் என்றார்.







நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 30 திங்கட்கிழமை 13.02.2023 கதிர் 348

## காட்டு யானை தாக்கி முதியவர் உயிரிழப்பு

### தெஹியத்தகண்டியவில் சோகம்

தெஹியத்தகண்டிய பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் ஞாயிற்றுக்கிழமை காட்டு யானையின் தாக்கி முதியவர் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

தெஹியத்தகண்டிய ஹென்னானிகல, தியபெதும முதன்மை 2

# உயிருடனும் நலமுடனும் இருக்கிறார் பிரபாகரன்

### நெடுமாறன் மீண்டும் பரபரப்புத் தகவல்



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினதும் ஈழத் தமிழ் மக்களினதும் தலைவரான பிரபாகரன் உயிருடனும் நல முடனும் இருக்கின் றார் என்று உலக தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டின் தஞ்சாவூர் மாவட்டத்தில்செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: 2

### மலையகத் தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்காக

## ஆசிரியர் கலாசாலை ஒன்றை கட்டித்தரவேண்டும் இந்தியா

### இணை அமைச்சர் முருகன், அண்ணாமலை குழுவினரிடம் மனோ வலியுறுத்து

மலையகத் தமிழ் மக்களுக்காக ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஒன்றை இந்திய அரசு தனது நிதியில் அமைத்து, இந்தியாவிலிருந்து அதற்கான வளவாளர்களை, ஆசிரியர்களை அனுப்பிப் பயிற்சியளிக்கவேண்டும்.

இவ்வாறு இந்திய இணையமைச்சர் கலாநிதி எல்.முருகனிடமும் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு தலைவர் கு.அண்ணாமலையிடமும் வலியுறுத்தியிருக்கிறார் தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோகணேசன்.

இந்திய நிதி உதவியில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணக் கலாசார நிலையத்தை மக்களுக்கு உரித்தாக்கும் நிகழ்வில் கலந்துகொள்ள யாழ். குடாநாட்டுக்கு வந்திருந்த இந்திய மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் மற்றும் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் கு.அண்ணாமலை குழுவினருக்கும் மலையகத் தமிழ் மக்களின் தலைவர்கள் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்றை இந்தியத் தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது. 2

## தலையில் கட்டையால் அடித்து அத்தியடியில் பெண் கொலை

யாழ்ப்பாணத்தில் பெண்ணொருவர் கட்டையால் தலையில் அடித்துக்கொலை செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். நகரிலிருந்து 1.5 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள அத்தியடி பகுதியில் நடந்த இந்தச் சம்பவத்தில் சுப்பிரமணியம் கலாநிதி (வயது 52) என்ற பெண்ணே கொல்லப்பட்டார்.

அவரது வீட்டுக்கு வேலை செய்வதற்காகவும் ஆடுகளுக்குக் குழைகள் வெட்டுவதற்காகவும் வரும் ஒருவரே இந்தக் கொலையைச் செய்திருக்கக்கூடும் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இறந்தவரின் மகள் வழங்கிய வாங்குமூலத்தின் அடிப் படையில் அந்தச் சந்தேக நபரைப் 2

## கிளிநொச்சியில் நேற்றிரவு வாள்வெட்டில் ஒருவர் சாவு

கிளிநொச்சியில் நேற்றிரவு வாளால் குடும்பத் தலைவர் ஒருவர் வாளால் வெட்டிக் கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிவநகர் கிராமத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான சண்முகசுந்தரம் யசோதரன் (வயது44) என்பவரே வெட்டுக் காயங்களுடன்வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

"வாள் வெட்டுக் காயங்களுடன் நால்வர் கிளிநொச்சி வைத்தியசாலையில் நேற்றிரவு சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். மற்றைய இருவர் படுகாயமடைந்து 8

## பிக்குவைக் குறிவைத்து துப்பாக்கிச் சூடு

மட்டக்களப்பு ஸ்ரீ மங்களாராம விகாரை மற்றும் கெவிலியாமடு சுமனரதன ஆகிய விகாரைகளின் விகாராதிபதியான அம்பிட்டிய சுமனரதன தேரரை இலக்கு வைத்து இனந்தெரியாத நபரொருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் சுமனரதன தேரருக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. சுடப்பட்டவேளை அவர் அறைக்குள் இருந்தார் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

## யாழ். மாநகர முதல்வருடன் கனேடியத் தூதுவர் சந்திப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் வந்துள்ள கனேடியத் தூதுவர் இன்று மாலை யாழ். மாநகர சபை முதல்வரைச் சந்தித்துப் பேசினார். 5 மணிக்கு சந்திப்பு இடம்பெற்றது.

மாநகர சபையின் தற்போதைய நிலவரம் நாட்டின் பொருளாதார நெருக்கடியினால் மாநகர சபை எதிர்கொள்ளும்நெருக்கடிநிலைமை தொடர்பிலும் மாநகர முதல்வர் கனேடியத் தூதுவருக்கு எடுத்து கூறினார்.

1990ஆம் ஆண்டு குடாநாட்டில் 1.1மில்லியன் மக்கள் வாழ்ந்த இந்த மாவட்டத்தில் இன்று 8

## நெடுமாறனின் கதைக்கு இராணுவம் மறுப்பு



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இல்லை என்றும், அவர் இறுதிப் போரில் கொல்லப்பட்டுவிட்டார் என்றும் இலங்கை இராணுவம் பி.பி.சியிடம் தெரிவித்துள்ளது. 2

## 15 வருடங்களின் பின்னர் அரசியல் கைதிக்கு பிணை

காலிகடற்படை முகாம்தாக்குதல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அரசியல்கைதி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார். 2006ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18ஆம் நாள் காலி தெற்கு கடற்படை முகாமை தாக்கி கடற்படையை சேர்ந்த கனக சுரங்கவிற்கு இறப்பை ஏற்படுத்தியதுடன் 22 பேருக்குகடும்காயங்களைஏற்படுத்தி கொலை செய்வதற்கு 8

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ஆசிரியர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பில் இந்திய தூதுவர் கோபால் பாகலே, அமைச்சர் ஜீவன் தொண்டமான், எம்பி ரிசாத் பதுர்தீன், இதொகா தலைவர் செந்தில் தொண்டமான், கோபியோ இலங்கை கிளை தலைவர் குமார் நடேசன், வர்த்தகர் கோபால்சாமி ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். இச்சந்திப்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது:

தென் தமிழக மாவட்டங்களான திருச்சி, மதுரை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் இருந்து சரியாக 1823 ஆண்டு முதல் இலங்கைக்கு ஆங்கிலேயரால் கொண்டுவரப்பட்டு, 2023இல் 200 ஆண்டுகளை இலங்கையில் நிறைவு செய்யும் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் தொடர்பில் உங்கள் அரசும், நாடும் மிக அதிக அக்கறையைக் கொள்ளவேண்டும் என நான் கோருகிறேன்.

1964ஆம் ஆண்டின் சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தம் எம்மை இந்த நாட்டில் பலவீனப்படுத்திவிட்டது. இந்த ஒப்பந்தம் நடைபெற்று, நமது மக்கள் நாடு கடத்தப்பட்டு இருக்காவிட்டால், இன்று இலங்கை நாடாளுன்றத்தில் சுமார் 25 மலையக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்திருப்போம்.

வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்த்து சுமார் 50 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் பலத்துடன் இலங்கையில் இருந்திருக்க வேண்டிய நிலைமையை சிறிமா, –சாஸ்திரி ஒப்பந்தம் இல்லாமல் செய்துவிட்டது.

அந்த சிறிமா–, சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையில் எஞ்சியவர்களுக்கு இலங்கை முழு குடியுரிமை வழங்கவேண்டும். இன்று சட்டப்படி குடியுரிமை இருக்கிறது. ஆனால், காணி, கல்வி, வீட்டு வசதி, சுகாதார உரிமைகள் இந்த நாட்டின் ஏனைய குடிமக்களுக்கு சமானமாக எமது மக்களுக்குக் கிடைப்பதில்லை.ஆகவே, முழு குடியுரிமை இல்லை.

இதற்காகவே நாம் ஜனநாயக ரீதியாக இலங்கைக்கு உள்ளே போராடுகிறோம். இதை இலங்கை அரசுக்கு ஞாபகப்படுத்தி எமது மக்களின் உரிமைகளைப் பெற்று தர வேண்டிய கடப்பாடு இந்திய அரசுக்கு இருக்கிறது.

எங்கள் மக்கள் எழுச்சி அடைய முதல் தேவை, கல்வி. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களை இடைநிலை, கபொத சா/த. உயர் தரம், வகுப்புகளில் எமது பிள்ளைகளுக்கு தமிழ் மொழியில் போதிக்க போதிய ஆசிரியர்கள் இல்லை.

இதற்காக உங்கள் நாட்டு ஆசிரியர்கள் இங்கேவந்துஎமதுபாடசாலைகளில்கற்பிப்பதை இந்நாட்டு ஆசிரிய தொழில் சட்டங்கள் ஏற்காது. நமது ஆசிரிய பணி விண்ணப்பதாரிகளை நாம் இந்தியாவுக்கு அனுப்ப மாட்டோம். ஆகவே ஒரே வழி, எமது மக்களுக்கான விசேட ஒதுக்கீட்டு திட்டத்தின் அடிப்படையில், இங்கே ஆசிரிய பயிற்சிகளை நடத்த கலாசாலை அமைத்து, அதற்கு தமிழகத்தில் இருந்து கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில்நுட்பம் பாட ஆசிரிய பயிற்சிகளை வழங்க பயிற்சியாளர்களை அனுப்புவதாகும்.

இந்தத் திட்டத்தை உங்கள் அரசு உடன் செய்யவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இதற்கான உள்நாட்டு அனுமதிகளை, கட்டமைப்புகளை இலங்கை ஜனாதிபதியுடன் பேசி நாம் செய்து தருவோம் –என்றார்.

## உயிருடனும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரபாகரன் நலமுடன் இருப்பது ஈழத்தமிழர்களுக்குநம்பிக்கையைஏற்படுத்தும்.

பிரபாகரன் குறித்து தவறான தகவல் பரப்பப்பட்டு விட்டது. அவருடன் நாம் தொடர்பில்தான் உள்ளோம்.

பிரபாகரனின் அனுமதியின் பேரிலேயே இந்தச் செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெறுகின்றது. பிரபாகர னின் மனைவி, மகளும் நலமுடன் உள்ளனர். உரிய நேரத்தில் மக்கள் முன் வருவார். பிரபாகரன் எங்கு உள்ளார் என்பதைத் தற்போது அறிவிக்க இயலாது. தமிழக அரசும், மக்களும் பிரபாகரனுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

இலங்கையில் ராஜபக்சக்களின் ஆட்சி முடிவுக்கு வந்திருப்பதால் இந்த அறிவிப்பை வெளியிடுகின்றோம் –என்றார்.

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும், இராணுவத்துக்கும் இடையே இடம்பெற்ற போர் 2009ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் இறுதிப் போரின்போது பிரபாகரன் உயிரிழந்துவிட்டார் என்று இலங்கை அரசால் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இதற்கு முன்னரும் சில தடவைகள் பழ நெடுமாறன் இதுபோன்று பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்று கூறியிருக்கிறார். பொருத்தமான நேரத்தில் அவர் வெளியே வருவார் என்றும் தெரிவித்திருக்கிறார்.

இதனைத் தொடர்ந்து பிரபாகரன் குறித்து மாறுபட்ட பல தகவல்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. பிரபாகரன் இறந்தது உண்மை என ஒரு தரப்பும் இல்லை, பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என மற்றொரு தரப்பும் கூறி வந்தன.

இந்நிலையில் தஞ்சாவூரில் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் இன்று செய்தியாளர்களைச் சந்தித்த போது பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்று அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நெடுமாறனின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தஞ்சாவூரில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் முற்றத்தில் இன்று பழ. நெடுமாறன், காசி ஆனந்தன் ஆகியோர் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினர். இந்தச் செய்தியாளர் சந்திப்பில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன், அவருடைய மனைவி, மகள் ஆகியோர் நலமுடன் இருக்கின்றார்கள் எனவும், அவர்கள் உரிய நேரத்தில் வெளிப்படுவார்கள் எனவும் பழ. நெடுமாறன் தெரிவித்திருந்தார்.

ஆனால், பிரபாகரன் உயிருடன் இருப்பது குறித்த செய்திகளை இலங்கை இராணுவம் முற்றிலுமாக மறுத்துள்ளது.

பிரபாகரன் நலமுடன் இருப்பதாகக் கூறப்படுவது குறித்து இலங்கை இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத்திடம் பி.பி.சி. கேட்டபோது, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இறுதிக்கட்ட யுத்தத்தில் கொல்லப்பட்டுவிட்டதற்கான ஆதாரங்கள் எம்வசம் உள்ளன – என்று தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி நடந்த இறுதிக்கட்டப் போரில் பிரபாகரன் கொல்லப்பட்டார். டி.என்.ஏ. ஆதாரங்களையும் நாம் எடுத்துள்ளோம்.

குறித்த திகதியில் பிரபாகரன் கொல்லப்பட்டமைக்கான டி.என்.ஏ. பரிசோதனை உள்ளிட்ட அனைத்து ஆதாரங்களையும் எடுத்துள்ளோம். தவறான தகவல்களை அவர்கள் வெளியிடுகின்றார்கள்.

இந்தக் கூற்று எங்களுக்கு எந்தவித எச்சரிக்கை உணர்வையும் ஏற்படுத்தவில்லை. ஏனெனில் எங்களுக்குப் பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டார் என்பது தெளிவாகத் தெரியும், அதில் சந்தேகமே இல்லை – என்று பிரிகேடியர் ரவி ஹேரத் பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

## காட்டு யானை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதியில் நடந்து கொண்டிருந்தவர் மீதே திடீரென காட்டு யானை தாக்கியது என்று பொலிஸார் தெரிவித்தனர்.காயமடைந்த நபர் தெஹியத்தகண்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் 88 வயதுடைய ஹென்னானிகல, தியபெதும பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

உயிரிழந்தவர் தனது மகளின் குழந்தை சுகயீனம்முற்றநிலையில்அவரைவைத்தியசாலைக்கு அழைத்து செல்ல முச்சகரவண்டி ஒன்றை தேடிச் சென்றபோது காட்டு யானை தாக்கியது என்று அவரது உறவினர்கள் தெரி வித்தனர். சட்ட வைத்திய அதிகாரியின் உடற்கூறு பரிசோதனைகளுக்குப் பின்னர் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## தலையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தேடிவருகின்றனர். வீட்டு வேலைகளுக்காகவும் ஆடுகளுக்கு குழைகள் வெட்டவும் ஒருவர் வருவது வழமை. அவர் நேற்றும் வந்திருந்தார். அப்போது நான் வீட்டுக்குள் இருந்தேன்.

அம்மா தான் அவருடன் கதைத்துக்கொண்டு இருந்தார். சிறிது நேரத்தில் இருவரும் வாக்குவாதப்படுகின்ற சத்தம் பெரிதாகக் கேட்டது, திடீரென்று அம்மா பெரிய சத்தமாக அவலக் குரலில் கத்தினார். நான் பதறியடித்து வெளியே ஓடிப்போய்ப் பார்த்தபோது, அம்மா குருதி பெருக்கெடுத்தோடியபடி நிலத்தில் கிடந்தார். வேறு யாரையும் அங்கு காணவில்லை என்று இறந்தவரின் மகள் பொலிஸாரிடம் வாக்கு–மூலம் வழங்கியிருக்கிறார். மரக்கட்டை ஒன்றினால் தாக்கியே பெண் கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் சந்தேகநபரின் அடையாளங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் அவற்றின் அடிப்படையில் அவரைக் கைது செய் வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் யாழ்ப்பாண குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அவசியம் தேவையான கோரிக்கை

இந்திய அரசின் நன்கொடையில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தை மக்களுக்கு உரித்தாக்கும் நிகழ்வில் கலந்துகொள்ள வந்திருந்த இந்திய இணை அமைச்சர் கலாநிதி எல். முருகன் மற்றும் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு தலைவர் கு. அண்ணாமலை ஆகியோர் குழுவை சந்தித்த மலையக மக்களின் அரசியல் தலைவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். அவற்றில் ஒன்று மிக முக்கியமானதும், அவசியமானதும், உடனடியாக நிறைவேற்றப்படவேண்டியதுமாகும்.

மலையகத்தமிழ்மக்கள்தமதுவாழ்வில்முன்னேறுவதற்கு அவசியமானது கல்வி என்பதால் அங்கு படிக்கும் மாணவர்களுக்குகணிதம், அறிவியல், ஆங்கிலம்என்பவற்றைக் கற்றுக்கொடுப்பதற்கான தகுதி வாய்ந்த ஆசிரியர்களை உருவாக்கும் வகையில் ஆசிரியர் கலாசாலை ஒன்றை இந்திய அரசு தனது செலவில் அமைத்துத்தரவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறார். அழகாகவும் ஆணித்தரமாகவும் சுருக்கமாகவும் அதற்கான தேவையை வலியுறுத்தியிரும் அவர், இந்தக் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றவேண்டும் என்றும் இந்தியப் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டிருக்கின்றார்.

"எமது மக்களுக்கான விசேட ஒதுக்கீட்டு திட்டத்தின் அடிப்படையில், இங்கே ஆசிரிய பயிற்சிகளை நடத்த கலாசாலை அமைத்து, அதற்கு தமிழகத்தில் இருந்து கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில்நுட்பம் பாட ஆசிரிய பயிற்சிகளை வழங்க பயிற்சியாளர்களை அனுப்பவேண்டும். இந்தத் திட்டத்தை உங்கள் அரசு உடன் செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கான உள்நாட்டு அனுமதிகளை, கட்டமைப்புகளை இலங்கை ஜனாதிபதியுடன் பேசி நாம் செய்து தருவோம்" என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

இன்றைய நவீன உலகில் மக்களின் உயர்வு கல்வி ஒன்றால் மட்டுமே சாத்தியமாகக்கூடியது. மலையக மக்கள் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு 200 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும் திட்மிட்டு விவசாயக்கூலிகளாக ஒடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு நவீன கொத்தடிமை முறை வாழ்க்கையே அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. பேருக்கு அவர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டிருந்தாலும் இந்த நாட்டின் சம குடிகளாக அவர்கள் இந்த 200 வருடங்களில் நடத்தப்பட்டதில்லை. ஒவ்வொரு சதத்துக்குமாக அவர்கள் போராடவேண்டிய நிலையிலேயே வைக்கப்பட்டிருந்திருக்கிறார்கள்.

அத்தகைய அவர்களின் வாழ்க்கையை மாற்றி அவர்களைத் தலைநிமிர வைக்க கல்வி ஒன்றால் மட்டுமே முடியும். கடந்த இரண்டு தசாப்த காலங்களில் மலையக இளைஞர்கள் தோட்டங்களைவிட்டு வெளியேறி தமது வாழ்க்கைக்கான வாய்ப்புகளைத் தேடத் தொடங்கிவிட்டார்கள் என்றாலும், வெளி உலகத்தில் அவர்கள் மீண்டும் அடிநிலைக் கூலிகளாக நோக்கப்படக்கூடிய அவலமே இருக்கிறது. தோடங்களில்விவசாயக்கூலிகளாக இருந்தவர்கள் நகரங்களின் கூலிகளாக உருமாறும் நிலை மாற்றம் மட்டுமே நடந்திருக்கிறது. கல்வியை மூலதனமாக்கிய மிகச் சிறு தொகையினரால் மட்டுமே அங்கிருந்து முற்றிலுமாக மீள முடிந்திருக்கிறது.

அந்த வாய்ப்பு அங்குள்ள அனைத்து இளைஞர், இளம் பெண்களுக்கும் வழங்கப்படவேண்டும். அவர்கள் அனைவருமே முழுமையான கல்வி வாய்ப்பைப் பெறவேண்டும். அதுவே அவர்களின் எதிர்கால உயர்ச்சிக்கு வழிவகுக்கும். அந்த வகையில் மலையகத் தலைவர்கள் முன்வைத்திருக்கும் கோரிக்கை மிகச் சரியானதும் சிறப்பானதுமாகும். இந்திய அரசு ஏற்கனவே அந்த மக்களுக்காக வீடமைப்புத்திட்டங்கள் உட்படப் பல்திட்டங்களை வழங்கியுள்ளது. எனவே விரைவில் இந்தக் கோரிக்கையையும் அது நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கலாம்.

# பட்டதாரிகளுக்கு உடனடியாக ஆசிரியர் நியமனம் வேண்டும்

## பத்திரமுல்லையில் இன்று ஆர்ப்பாட்டம்!




ஆசிரியசேவைக்கானகூடியதகுதியுடைய பட்டதாரிகளை காலம் தாழ்த்தாது ஆசிரிய சேவைக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும் எனக் கோரிஆரப்பாட்டம்ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் கல்வியலாளர்கள் பட்டதாரிகள் ஒன்றியம் மற்றும் இலங்கை ஆசிரிய சேவை சங்கத்தினரால் பத்தர முல்லை இசுறுபாய கல்வி அமைச்சுக்கு முன்பாக நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

# நடன ஆசிரியர் நியமனத்தில் பல லட்சம் ரூபா நிதி மோசடி

## கல்முனை பொலிஸாரால் நால்வர் கைது

நடனஆசிரியர்நியமனம் ஒன்றை பெற்றுத்தருவதாக கூறி பல லட்சம் ருபாக்களை வங்கி ஊடாக மோசடி செய்த குழுவினர் கல்முனை தலைமையக பொலிஸார் விரித்த வலையில் சிக்கியுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு கடந்த வியாழக்கிழமை கல்முனை பகுதியைச் சேர்ந்த பொன்னம்பலம் கணேசன் என்பவர் முறைப்பாடு ஒன்றை அளித்திருந்தார்.

அந்த முறைப்பாட்டில் நடன ஆசிரியர் நியமனம் ஒன்றினைபெறுவதற்குகடந்த 6 ஆம் திகதி திங்கட்கிழமை ஒரே நாளில் கட்டங்கட்டமாக முறையே 6 லட்சம் ரூஜுத, 120,000 120,000 என 8 லட்சத்து 40 ஆயிரம் ரூபாக்களை வங்கி ஊடாக ஒருவருக்குவைப்புசெய்தநிலையில் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் இந்த நியமனத்தைத் தனது மகனுக்கு பெற்றுக்கொடுப்பதற்காகவே குறிப்பிட்ட பணத்தொகைகளை வழங்கியதாகவும்குறிப்பிட்டிருந்தார்.

மேலும், இந்தியாவில் தனது மகன் நடன பாடத்தில் பட்டத்தை நிறைவுசெய்திருந்த நிலையில் இந்த நியமனத்தை பெற முயற்சித்திருந்ததாகவும் கல்வி அமைச்சில் உள்ள ஒரு பதவி நிலை உயர் அதிகாரியின்பெயரைபயன்படுத்தி இந்த மோசடி இடம்பெற்றுள்ளதைபின்னர்அறிந்துள்ளதாக அந்த முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக வழிநடத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் ஆலோசனையில் கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் தலைமையில் சென்ற பொலிஸ் கன்ஸ்டபிள்களான முஜிசாத், விஜிதரன், பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் செவ்வந்தி குழுவினர் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 4 சந்தேக நபர்களை பொலிஸ் விசேட பிரிவின் தகவல் ஒருங்கிணைப்பிற்கமைய கைது செய்துள்ளனர்.

இந்த நடவடிக்கையில் 2 பெண்கள் 2 ஆண்கள் பொலிஸாரால் திருகோணமலை மட்டக்களப்புபகுதிகளில்இருந்து கைதாகியதுடன் விசாரணைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த விசாரணையின் போது கைதானவர்களின் வாக்குமூலத்தின் படி சிறைச்சாலை ஒன்றில் சிறைவாசம் அனுபவிக்கின்ற நபர் ஒருவரின் தொடர்பின் பின் விளைவாக இந்தச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் சிறையில் உள்ளவரேதம்மைவழிநடத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், கைதான பெண் சந்தேக நபரின் வங்கி கணக்கில் தொடர்ச்சியாக அதிகளவான பணக்கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்று வந்துள்ளதையும்பொலிஸார் விசாரணையில் கண்டறிந்துள்ளனர்.

அத்துடன்நடனஆசிரியர் நியமனத்துக்காக மற்றுமொரு பெண் சந்தேக நபரின் வங்கி கணக்கிலக்கத்துக்கும் ஏனைய சந்தேக நபர்களது வங்கி கணக்கிலக்கத்துக்கும் ஒரு நாளில் எட்டு லட்சத்தி 40 ஆயிரம் வைப்பிலடப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த மோசடி கல்வி அமைச்சில் உள்ள அதிகாரி ஒருவரது பெயரை குறிப்பிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அவரும் பொலிஸ் நிலையத்துக்கு வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக அழைக்கப்பட்டுள்ளார்.

மேலும், அந்த அதிகாரியும்ஏற்கனவேதனதுபெயரில் இவ்வாறு மோசடி இடம்பெற்று வருவதாக கூறி பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு வழங்கி இருப்பதாக பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த மோசடியில் கைதான அனைத்து சந்தேக நபர்களையும் ஞாயிற்றுக் கிழமை கல்முனை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் இவ்வாறான செயற்பாடுகளை போன்று ஏதேனும் முறைப்பாடுகள் உள்ளனவா? அத்துடன் இவ்வாறான குழுக்களை உருவாக்கி சிறையில் இருந்து வழிநடத்தும் நபர்கள் தொடர்பிலும் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# விமானத்தில் சுகவீனமடைந்தவரின் உயிரைக் காத்த பெண் மருத்துவர்



ஆஸ்திரேலியாவின் மெல்பேர்னிலிருந்து இலங்கைக்கு வந்து கொண்டிருந்த விமானத்தில் கடுமையாக நோய்வாய்ப்பட்ட ஒருவரின் உயிரை இலங்கை பெண் வைத்தியர் ஒருவர் காப்பாற்றியுள்ளார்.

மனோரி கமகே என்ற பெண் வைத்தியரே அவரைக் காப்பாற்றியுள்ளார்.

75 வயதான மூதாட்டி ஒருவர் சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்துள்ளார்.

இதனையடுத்து விமானக் குழுவினரின் அறிவித்தலின்பேரில் உடனடியாகச் செயற்பட்ட அவர், குறித்த பெண்ணுக்கு அடிப்படை மருந்துகளை வழங்கி, கட்டுநாயக்கவுக்குக் கொண்டுவரும் வரை தேவையான சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# 35 ஆயிரத்தை எட்டியது சாவு எண்ணிக்கை துருக்கி–சிரிய பெருந்துயரம் தொடர்கிறது



துருக்கியில் தொடர்ந்தும் கடும் குளிர் நிலவி வருவதால் வீதியோரங்களிலேயே நெருப்பு மூட்டிக்கொண்டு உதவிக்காகக் காத்திருக்கிறார்கள் மக்கள்

துருக்கியில் ஏற்பட்ட வரலாறு காணாத நிலநடுக்கத்தால் துருக்கி மற்றும் அதன் அண்டை நாடான சிரியாவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 35 ஆயிரத்தை எட்டியுள்ளது. இந்நிலையில் மேற்குலகப் பொருளாதாரத் தடை, உள்நாட்டுப் போர், போதிய மருத்துவக் கட்டமைப்பு வசதியில்லாத சிரியாவின் நிலை மிக மோசமாக உள்ளதால் அங்குள்ள மக்கள் இந்த நிலநடுக்கத்தால் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

ஏற்கெனவே போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிரியாவிற்கு நிவாரணப் பொருட்களை கொண்டு சேர்ப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதை கவலையுடன் ஒப்புக் கொண்டுள்ள ஐ.நா. சபை, இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்பு 70 ஆயிரத்தையும்கூடக் கடக்கலாம் என்று அச்சம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் துருக்கியில் நேற்றைய தினம் (ஞாயிறு) கர்ப்பிணிப்பெண், சிறுகுழந்தைகள் எனப் பலரும் 6 நாட்களுக்குப் பின்னர் உயிருடன் மீட்கப்பட்ட சம்பவம் சிறிய ஆறுதலாக அமைந்தது. ஆனால், நாட்கள் செல்லச்செல்ல மக்களின் துக்கம் அரசின் மீதான கோபமாக ஆவேசமாக மாறி வருகிறது. சிரியாவிலும் இதே நிலைதான் நிலவுகிறது.

### ஏங்கும் சிரியா

சிரியாவின் வடமேற்குப் பகுதிக்கு ஐ.நா. குழு ஒன்று உதவிப் பொருட்களை அனுப்பியது. துருக்கி வழியாகச் சிரியாவை இந்த நிவாரணப் பொருட்கள் அடைந்தன.

அதிபர் பார் அல் அசாத்துக்கு எதிராக உள்ளூர் கிளர்ச்சியாளர்கள் மோதலில் ஈடுபட்டுள்ளதால் பல ஆண்டுகளாகவே சிரியாவின் சுகாதாரக் கட்டமைப்பு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் இதுபோன்ற மிகப்பெரிய இயற்கைப் பேரிடரை எதிர்கொள்ளும் அளவிற்கு அதன் சுகாதார கட்டமைப்பு இல்லை. இது ஒருபுறமிருக்க சிரியா மீது பல்வேறு மேற்கத்திய நாடுகளும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. உள்நாட்டுப் போர், பொருளாதாரத் தடைகள், நிலநடுக்கம் என்று அடுக்கடுக்கான துயரங்களால் சிரிய மக்கள் வேதனையில் வெந்து இப்போது வெகுண்டெழுந்துள்ளனர். பெருந்துயருக்கு இடையே தாங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அம்மக்கள் குமுறுகின்றனர்.

### உதவி போதாது

பாப் அல் ஹவா எல்லை வழியாக வடமேற்கு சிரியாவிற்கு 10 டிரக்குகளில் ப்ளாஸ்டிக் ஷீட்டுகள், கயிறுகள், ஸ்க்ரூ, ஆணி, போர்வை, மெத்தை, விரிப்புகள் போன்ற தற்காலிக கூடாரங்களுக்கு தேவையான பொருட்கள் கொண்டு செல்லப்பட்டன. ஆனால் இவை மட் டும் போதாது எனக் கூறுகின்றனர் களப் பணியாளர்கள். ஆயிரக்கணக்கான கட்டடங்கள் அங்கு தரைமட்டமாகியுள்ளன.

முன்னதாக நேற்று சிரியாவுக்கு ஐக்கிய அரபு அமீரகம் பல மில்லியன் டாலர் நிதியும், நிவாரணப் பொருட்களும் வழங்கவும் அறிவித்துள்ளது. இதற்காக யுஏஇ அரசுக்கு அதிபர் அசாத் நன்றி தெரிவித்துள்ளார்.

சிரியாவிற்கு உலக நாடுகள் தாராளமாக உதவி செய்ய வேண்டும் என்பது தான் அந்நாட்டு மக்களின் ஏக்கமாகவும் ஐ.நா.வின் வலியுறுத்தலாகவும் உள்ளது. சிரியாவிற்கு உதவி தேவை (SyriaNeedsHelp) என்ற ஹேஷ்டேக் கீச்சகத்தில் ட்ரெண்டாகி வருகிறது.

# கட்டட ஒப்பந்தக்காரர்கள் துருக்கியில் திடீர் கைது

## முறையற்ற கட்டடங்களுக்காக சட்டம் அவர்கள் மீது பாயும்

துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் இடிந்து விழுந்த கட்டடங்களின் ஒப்பந்ததாராகளை அதிகாரிகள் கைது செய்தனர்.

மீட்புப் பணிகள் மந்தமாகவே வேகத்தில் நடைபெற்று வரும் நிலையில், நிலநடுக்கத்தால் பாதிப்புக்கு உள்ளாகும் பகுதியில் உரிய விதிமுறைகளைப் பின்பற்றாத கட்டட ஒப்பந்தகாராகள் மீது இப்போது கவனம் திரும்பியுள்ளது.

துருக்கியின் கட்டுமான விதிகளின்படி நிலநடுக்கத்தை எதிர்கொள்வதற்கான பொறியியல் தர அளவுகள் பின்பற்றப்பட வேண்டும். இந்த விதிமுறை உரிய வகையில் நடைமுறைப்படுத் தப்படாத நிலையில், ஆயிரக் கணக்கான கட்டங்கள் இடிந்து விழுந்து பல்லாயிரக்கணக்கான வர்களின் உயிரிழப்புக்கு காரணமாகி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தாலும், உயிர்ச் சேதங்கள் அதிகரிப்புக்கு மோசமான கட்டுமானமே காரணம் என்று நிபுணாகளும் மக்களும் குற்றம்சாட்டி வருகின்றனா.

துருக்கியின் துணை அதிபர் ஃபுவாட் ஒக்டே கூறுகையில், ”இடிந்து விழுந்த கட்டங்களுக்குப் பொறுப்பானவாகள் எனச் சந்தேகிக்கப்படும் 131 பேரை கைது செய்ய கைதாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது” என்றார்.

நீதித் துறை அமைச்சர் கூறும்போது, ”கட்டடத்தின் குறைபாடுகளுக்குப் பொறுப்பானவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவர். கட்டுமானத்தின்போது பயன்படுத்தப்பட்ட பொருள்களின் மாதிரியைச் சேகரிக்கும் பணியில் விசாரணை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். இதற்காக விசாரணை அமைப்பும் ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம். கட்டுமானப் பணியில் ஈடுபட்ட ஒப்பந்தகாராகளைக் கண்டறிவது, ஆதாரங்களைத் திரட்டுவது, கட்டடத்துக்கான அனுமதி, கட்டுமான தொழிலுக்கான அனுமதி ஆகியவை குறித்து இந்த அமைப்பின் அதிகாரிகள் விசாரணை மேற்கொள்வர்” என்றார்.

இடிந்து விழுந்த கட்டடத்தில் கூடுதல் அறையை ஏற்படுத்த கட்டுமானப் பணிகளின்போது தூண்களைக் குறைத்துள்ளனா என்ற குற்றச்சாட்டின்படி 2 போ காஸியன்டெப் மாகாணத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

ஹடே மாகாணம், அன்டக்யா என்ற நகரில் இடிந்து விழுந்த 12 அடுக்குமாடி கட்டடத்தின் ஒப்பந்ததாரர் வெளிநாட்டுக்குத் தப்பிக்க முயற்சித்தபோது, இஸ்தான்புல் விமான நிலையத்தில் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.



# இரண்டு மாதமேயான குழந்தை 128 மணி நேரத்தின் பின் மீட்பு

துருக்கி நிலநடுக்கத்தால் ஏற்பட்ட இடிபாடுகளுக்குள் சிக்கிய 2 மாதகுழந்தை 128 மணி நேர போராட்டத்துக்குப் பிறகு உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

துருக்கியில் கடந்த திங்கள் கிழமை 7.8 ரிச்டர் அளவில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில், பல்வேறு நகரங்களில் 6,000 மேற்பட்ட கட்டடங்கள் இடிந்து சேதமாயின.

இடிபாடுகளில் சிக்கி உயிரிழுந்தோர் எண்ணிக்கை இதுவரையில் 35 ஆயிரத்தை தாண்டியுள்ளது. மீட்பு பணி தொடர்ந்து நடைபெற்று வருவதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிரிக் கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

கடுமையான உறைபனி சூழலுக்கிடையிலும் மீட்புக் குழுவினர் தொடர்ந்து தங்களது பணிகளை அயராது மேற்கொண்டு வருகின்றனர். அதற்கு ஊக்கமளிக்கும் வகையில், பிறந்து இரண்டு மாதங்களே ஆன குழந்தை 128 மணி நேரத்துக்குப் பிறகு இடிபாடுகளிலிருந்து மீட்கப் பட்டுள்ளது மீட்பு குழுவினரிடையே சோகத்திலும் சந்தோத்தையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆயிரக்கணக்கான மீட்பு குழுவினரின் சோர்வடையாத பணியால் கடந்த ஐந்து நாட்களில் ஆறு மாத கர்ப்பிணி, 70 வயது பெண், குழந்தைகள் என ஏராளமானோர் மீட்கப்பட்டுள்ளனர் என துருக்கி ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

துருக்கி, சிரியாவில் கடந்த திங்கள்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கம் இந்த நூற்றாண்டில் உலக அளவில் ஏற்பட்ட 7வது மிக மோசமான பேரழிவாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு 2003ஆம் ஆண்டு ஈரானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 31,000 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் மீண்டும் மர்மப் பொருள் சுட்டுவீழ்த்தப்பட்டது

அமெரிக்க வான்வெளியில் மீண்டும் ஒரு மர்மப் பொருள் அந்நாட்டு வான் படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. ஒரே வாரத்தில் இது 4ஆவது சம்பவம்.

பெப்ரவரி 4 ஆம் திகதி சீன உளவு பலூன் ஒன்று அமெரிக்க இராணுவத்தால் சுட்டுவீழ்த்தப்பட்டது. அந்த பலூன் தங்கள் நாட்டுடையதுதான், வானிலை ஆய்வுக்காக தனியார் நிறுவனம் அனுப்பியது திசை மாறி அமெரிக்க வான் எல்லைக்குள் வந்துவிட்டது என்று சீனா விளக்கமளித்தது.

ஆனால் அதை ஏற்க மறுத்த அமெரிக்கா அந்த உளவு பலூன் கடலின் மீது பறந்த போது சுட்டு வீழ்த்தியது. அதிபர் ஜோ பைடனின் உத்தரவின் பேரில் எஃப் 16 ரக போர் வானூர்தி மூலம் இந்த மர்மப் பொருள் சுட்டு வீழ்த்தப்பட்டது.

தொடர்ந்து 11 ஆம் திகதி அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தின் மீது 40 ஆயிரம் அடி உயரத்தில் ஏதோ மர்ம பொருள் ஒன்று பறக்க அதனை அந்நாட்டு போர் வானூர்திகள் சுட்டுவீழ்த்தின. கனடா நாட்டுடனான எல்லையை ஒட்டி யுகோன் மாகாணத்தின் அருகே அடுத்தடுத்த நாள் மற்றொரு மர்மப் பொருட்கள் சுட்டு வீழ்த்தப்பட்டது. இந்நிலையில் நேற்று மீண்டும் ஒரு மர்மப் பொருள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. இந்த 4 மர்மப் பொருட்களிலும் முதன்முதலில் வீழ்த்தப்பட்ட சீன உளவு பலூன் தான் மிகப்பெரியது. இதற்கிடையில் கனடா நாட்டுப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ யுகோன் மாகாணத்தில் ஆய்வு மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பங்களாதேஷின் புதிய அதிபராகிறார் முகமது சகாபுதீன்

பங்களாதேஷின் அடுத்த அதிபராக ஓய்வு பெற்ற நீதிபதி முகமது சகாபுதீன் (74) தெரிவு செய்யப்படவிருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் கொண்ட ஆளும் அவாமி லீக், அவரின் பெயரைப் பரிந்துரை செய்திருப்பதையடுத்து அவாநாட்டின் 22ஆவது அதிபராகத் தோவு செய்யப்படுவது உறுதியாகியுள்ளது.

தற்போதைய அதிபா முகமது அப்துல் ஹமீதின் பதவிக் காலம் ஏப். 24ஆம் திகதி நிறைவடைவதையொட்டி, புதிய அதிபராக முகமது சகாபுதீன் பெயரை ஆளும் அவாமி லீக் கட்சி, தோதல் ஆணையத்தில் சமாப்பித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் மொத்தம் உள்ள 350 இடங்களில் அவாமி லீக் கட்சிக்கு 305 உறுப்பினாகள் உள்ளனா.

பிரதான எதிர்க்கட்சியான வங்கதேச தேசியவாத கட்சியின் 7 எம்.பி.க்கள் கடந்த டிசெம்பரில் ராஜிநாமா செய்ததால், அந்தக் கட்சியால் அதிபா பதவிக்கு வேட்பாளரை பரிந்துரை செய்ய முடியாது.

மாவட்ட மற்றும் முதன்மை அமாவு நீதிபதியாக இருந்து ஓய்வுபெற்ற முகமது சகாபுதீன், பின்னா அரசியலில் இணைந்தார். அவாமி லீக் ஆலோசனைச் சபை உறுப்பினராகவும் ஆனார். பங்களாதேஷில் அதிபர் பதவி என்பது மரியாதைக்குரியது மட்டுமே.

# இலங்கை இந்திய கலாசார ஒத்துழைப்பின் அடையாளம் யாழ்ப்பாண கலாசார நிலையம்

## இந்திய தலைமை அமைச்சர் மோடி மகிழ்ச்சிப் பகிர்வு

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நெருக்கமான கலாசார ஒத்துழைப்பை அடையாளப் படுத்தும் ஒரு முக்கிய செயற்திட்டமாக யாழ்ப்பாணம் கலாசார நிலையம் காணப்படுகிறது என்று இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் முழுமையான நிதி உதவியில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாண கலாசார நிலையம் பெப்ரவர 11ஆம் திகதி மக்களுக்கு உரித்தாக்கப்பட்டது.

இத்திட்டத்தின் ஊடாக பெருமளவான மக்கள் நன்மையடைவார்கள் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் தனது உத்தியோகப்பூர்வ கீச்சகப் பக்கத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசதலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அதியுயர் வருகை யாழ்ப்பாண கலாசார நிலையம் திறப்புவிழாவை மேலும் சிறப்பித்துள்ளது என்றும் மோடி பாராட்டினார்.

"யாழ்ப்பாண கலாசார நிலையத்தின் ஊடாக பெருவாரியான மக்கள் பயனடைவார்கள்" எனவும் அவர் தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.

Narendra Modi
@narendramodi
India government official

இந்தியா இலங்கை இடையிலான நெருக்கமான கலாசார ஒத்துழைப்பினை அடையாளப்படுத்தும் ஒரு முக்கிய செயற்திட்டமே யாழ்ப்பாணம் கலாசார நிலையம். இந்நிலையத்தின் மூலமாக பெருவாரியான மக்கள் நன்மையடையவுள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் அதிஉயர் பிரசன்னம் இந்நிகழ்வை மேலும் சிறப்பித்தது.

Translate Tweet

India in Sri Lanka @IndiainSL · Feb 11

The iconic Jaffna Cultural Center was dedicated to the people today in the gracious presence of President H.E @RW_UNP,Minister @Murugan_MOS,High Commissioner,Hon.Ministers Vidura Wickramanayake, Douglas Devananda,Kadar Masthan,several MPs& dignitaries from all walks of life.1/

Show this thread



## தொண்டைமானாறு கிணற்றிலிருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு பகுதியில் உள்ள தோட்டக் கிணறு ஒன்றிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டது.

கெருடாவில் தெற்கு தொண்டைமானாற்றைச் சேர்ந்த ஆரன் பாலசிங்கம் (வயது- 71) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டிலிருந்து சுமார் 600 மீற்றர் தொலைவில் உள்ள தோட்டக் கிணற்றில் இருந்தே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## விபத்தில் காயமடைந்த இளைஞர் அநியாய சாவு

கதிரிப்பாயில் கடந்த வாரம் இடம்பெற்ற விதி விபத்தில் காயமடைந்திருந்த விஜயரத்தினமூர்த்தி டுவிசன் (வயது 20) என்ற இளைஞர் சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம், அச்சுவேலியில் அமைந்துள்ளது கதிரிப்பாய். மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த டுவிசன் வீதியின் குறுக்காக இரும்பு கூட்டினை கொண்டு சென்றவர்களுடன் மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றது என்று பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

அச்சுவேலியில் இருந்து தனது நண்பனுடன் கொடிகாமத்திற்குச் சென்றுவிட்டு, சாவகச்சேரி-புத்தூர் வீதியூடாக மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்தவேளை, வீதியின் குறுக்காக கொண்டு செல்லப்பட்டுக்கொண்டிருந்த இரும்புக் கூட்டில் மோதி விபத்துக்குள்ளானார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தனர். இந்தநிலையில் ஞாயிற்றுக் கிழமை காலை டுவிசன் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

## ஊடகவியலாளர் சத்தியமூர்த்திக்கு மட்டக்களப்பில் நினைவு தினம்

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம். மட்டு. ஊடக அமையம் மற்றும் கிழக்கு மாகாணத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியன ஒன்றிணைந்து ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தியின் 14 ஆவது நினைவு தினத்தை இன்று காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத்தூபியில் மேற்கொண்டன.

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் வர் கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அமரர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தியின் உருவப் படத்திற்கு மூத்த ஊடகவியலாளர்களான கதிரேசபிள்ளை கிருபாகரன் மற்றும் விஸ்வநாதன் பத்மஸ்ரீ ஆகியோர் ஒன்றிணைந்து மலர்மாலை அணிவித்தனர். அத்தோடு நிகழ்வில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்களால் அகல் விளக்கேற்றப்பட்டு, மலர் தூபி அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இவர் 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப் போரின்போது குண்டுத் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தார் சத்தியமூர்த்தி.

## பெரமுனவின் அரசியல்வாதி கஞ்சா செடிகளுடன் கைது



பொதுஜன பெரமுன கட்சியின் நகர சபை உறுப்பினர் ஒருவர் கஞ்சா செடி வளர்த்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் தனது தோட்டத்தில் வளர்க்கப்பட்ட மூன்று கஞ்சா செடிகளுடன் கைது செய்யப்பட்டுள்ளளார்

அவரது வீட்டுத் தோட்டத்தில் ஏனைய செடிகளுக்கு மத்தியில் மூன்று கஞ்சா செடியையும் அவர் வளர்த்து வந்துள்ளார். இரகசியத் தகவலை அடுத்து செடிகளைக் கைப்பற்றிய பொலிஸார் அவரையும் கைது செய்தனர்.

என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் கடுகண்ணாவ பிரதேச சபையின் பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர். வரும் மார்ச் 9ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலிலும் அவர் போட்டியிடு கின்றார்.

## நீதிவானின் காரையே திருடிய பலே கில்லாடி

பிலியந்தலையில் நீதிவானின் உத்தியோகபூர்வ காரையே திருடிச் சென்றிருக்கின்றான் கில்லாடி திருடன்.

குளியாபிட்டி நீதிவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதிபதி சம்பத் ஆரியசேனவின் காரே திருடப்பட்டுள்ளது என்ற பொலிஸார் தெரிவித்தனர்.

சனிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பிலியந்தலை மடபாத பின்வலையிலுள்ள நீதிவானுக்குச் சொந்தமான வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரே திருடப்பட்டுள்ளது. வீட்டை வாடகைக்கு எடுப்பதற்காகப் பார்க்க வந்த ஒருவரே அங்கு நிறுத்தப்பட்டிருந்த காருடன் மாயமாகி விட்டார் என்று பொலிஸார் கூறினர்.

இரண்டு மாடி வீடு வாடகைக்கு உள்ளதாக இணையதளம் ஒன்றில் வெளியான விளம்பரத்தைப் பார்த்து வந்த ஒருவரே நீதிவானின் காரை திருடிச் சென்றுள்ளார் என்கின்றனர் பொலிஸார்.

## க.பொ.த உயர்தர பரீட்சையில் எவ்வித மோசடிகளும் இல்லை!

### பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவிப்பு

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் எவ்வித மோசடிகளும் இடம்பெறவில்லை என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கடந்த நாள்களில் உயர்தரப் பரீட்சை மோசடிகள் எதுவுமின்றி நடைபெற்றுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

மின்சாரத் தடை உள்ளிட்ட சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பரீட்சை முறைகேடுகள் அல்லது வேறு முறைப்பாடுகள் இன்றி இம்முறை பரீட்சை நடைபெற்று வருவதாக தெரிவித்துள்ளார்.

வரையறுக்கப்பட்ட மாணவர்கள் மட்டும் தோற்றும் பரீட்சைகள் எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி உயர்தரப் பரீட்சை நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 13ஆவது அரசமைப்பு திருத்தத்தை வலியுறுத்த இந்தியாவுக்குத் தார்மீக உரிமைகள் கிடையா!

### சரத் வீரசேகர தொடர்ந்தும் விடாப்பிடி

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கைக்கு அழுத்தம் பிரயோகிக்க இந்தியாவுக்கு தார்மீக உரிமை கிடையாது என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மேற்பார்வையுடனான விசேட பொறிமுறையை உருவாக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவதானம் செலுத்தியுள்ளார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு இந்தியா பலவந்தமான முறையில் 13ஆவது திருத்தத்தை இலங்கைக்கு அமுல்படுத்தியது என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.



வடக்கு கிழக்கு மக்களை முன்னிலைப்படுத்தி அரசியல் செய்யும் தமிழ் தலைவர்கள், அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அவதானம் செலுத்துவதில்லை என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கே மக்கள் ஆணை வழங்கினார்கள் என்பதால் ஜனாதிபதி அது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டாலும் பொலிஸ் அதிகாரத்தில் மாற்றமில்லை என கூறும் ஜனாதிபதியின் உறுதிப்பாடு எவ்வளவு நாள்களுக்கு செல்லுபடியாகும் என்றும் சரத் வீரசேகர கேள்வியெழுப்பியுள்ளார்.

## சுகாதாரத்துறை நாட்டில் வீழ்ச்சியடைந்து அரச வைத்தியசாலை மூடப்படும் அபாயம்!

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

மருந்து தட்டுப்பாட்டு நிலைமை தொடருமாக இருந்தால் கூடிய விரைவில் சுகாதாரத்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்து, இலங்கையில் அரச வைத்தியசாலைகள் மூடப்படும் நிலைமை ஏற்படலாம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

அரச வைத்தியசாலைகளில் நிலவும் அத்தியாவசிய மருந்து தட்டுப்பாட்டால் அத்தியாவசிய சத்திர சிகிச்சைகளுக்கு முன்னுரிமை வழங்கி செயற்படுமாறு சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கருத்து தெரிவித்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரான வைத்தியர் வாசன் இரத்னசிங்கமே இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

# நியாயமற்ற வரிக்கு எதிராக விரைவில் முக்கிய தீர்மானம்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு

அரசாங்கத்தின் வரி திருத்தக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அரச மருத்துவ அதிகாரிகள் உள்ளிட்ட தொழில் வல்லுநர்கள், தொழிற்சங்கங்கள் இன்று (திங்கட்கிழமை) ஒன்றுகூடி முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ளவுள்ளன.

மேலும், நிறைவேற்றுக்குழு மற்றும் மத்திய குழு கூட்டம் நாளை (செவ்வாய்க்கிழமை) மற்றும் மறுநாள் (புதன்கிழமை) கூட்டப்பட்டு, வரிக்கொள்கை தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாகவும் வரி திருத்தச் சட்ட மூலத்தை மாற்றியமைக்கவில்லை என்றால் தமது போராட்டங்கள் தீவிரமடையும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்–

தற்போது அரச மருத்துவ அதிகாரிகள் சங் கம் உள்ளிட்ட 40 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தின் நியாயமற்ற வரிக் கொள்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ச்சியாக முன்னெத்து வருகின்றன.

அண்மையில் கொழும்பு 2 ஹைட் பார்க்கில் அனைத்து தொழிற்சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இணைந்து எதிர்ப்பு பேரணியில் ஈடுபட்டனர்.

அதே நாள் மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாடளாவிய ரீதியில் 24 மணித்தியால பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தது. இருப்பினும், அன்று அத்தியாவசிய மற்றும் அவசர சிகிச்சை பிரிவுகளுக்கான சேவைகள் மாத்திரமே இடம்பெற்றிருந்தன.

அத்துடன் ஏனைய தொழிற்சங்கங்களும் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டிருந்தன.

எனினும், அரசாங்கம் இந்த விடயங்கள் தொடர்பாக சாதகமான பதில்கள் எதையும் வெளிப்படுத்தவில்லை.

இருப்பினும், நிதியல்லா நன்மைகளைப் பெறுகின்ற அதிகாரிகளுக்கு குறிப்பிட்ட சில சலுகைகளை மாத்திரம் வழங்கியிருக்கிறது.

அதாவது நிதியல்லா நன்மைகளை சொற்ப அளவான தரப்பினரே பெற்றுக்கொள்ளக்கூடியவர்களாகக் காணப்படுகிறார்கள்.

இந்நிலையில் எமது கோரிக்கைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து இதுவரையில் எதுவித பதில்களும் கிடைக்கப்பெறவில்லை.

ஆகவே, எமது எதிர்கால நடவடிக்கைகள் கடுமையாக இருக்கும் என்பதை கூறிக்கொள்கிறோம்.

மேலும், இந்த விடயம் தொடர்பில் தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு கூடி எதிர்வரும் காலங்களில் நிறைவேற்றப் போகும் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயவுள்ளது.

அரசாங்கம் எமது கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கும் விதமாகவும் அதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பாகவும் அதில் கலந்துரையாடவுள்ளோம்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாளை (செவ்வாய்க்கிழமை) காலை நிறைவேற்றுக் குழு கூட்டத்தையும், எதிர்வரும் புதன்கிழமை காலை மத்திய குழு கூட்டத்தையும் கூட்டவுள்ளது.

இந்நிலையில் இந்த நிறைவேற்றுக் குழு கூட்டம் மற்றும் மத்திய குழு கூட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் தீர்மானங்களுக்கு அமைவாக நாம் செயற்படவுள்ளோம்.

மேலும், நியாயமற்ற வரிக் கொள்ளைக்கு எதிராக எமது நடவடிக்கைகள் தீவிரமடையும்.

நியாயமான கொள்கைகளுக்கு அரசாங்கம் நிச்சயம் செவிசாய்த்து வரிக்கொள்கையை மீள திருத்தியமைத்து, முறையான வரிக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும்.

மேலும், நாம் மேற்கொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கும் மக்களுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். – என்றார்.

# மருந்துத் தட்டுப்பாட்டைச் சமாளிக்க புலம்பெயர் உறவுகள் உதவவேண்டும்

## வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவர் கோரிக்கை

நோயாளிகளுக்கான அத்தியாவசிய மருந்து வகைகள் இல்லாதமையால் வைத்தியர் சேவையை சரியாக செய்ய முடியாமலுள்ளது. இதற்கு புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் உறவுகள் உதவ வேண்டும் என வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி வைத்தியர் ரதினி காந்தநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

குழந்தைகளுக்கான பாணி மருந்துகள், நோயாளிகளுக்கான அத்தியாவசிய மருந்து வகைகள் எமது வைத்தியசாலையில் இல்லை. நோயாளிகளை வெளியே வாங்குமாறு கூறவும் எமக்கு மனம் வரவில்லை.

ஏனென்றால் மக்கள் ஏற்கனவே கஷ்டத்தில் உள்ளார்கள். அவர்களை மேலும் கட்டத்துக்குள் தள்ளுவதற்கு மனமில்லாமல் இருக்கிறது. வைத்தியர் சேவையை சரியாக செய்ய முடியாமல் உள்ளது.

இந்த தொழிலில் இருந்து விலக வேண்டும் என்ற அளவிற்கு உள்ளது. புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் உறவுகளும் ஏனைய நல்லுள்ளம் கொண்ட உறவுகளும் எங்களுக்கு போதுமான அளவு குழந்தைகளுக்கான மருந்துகளையும், சளி மற்றும் காயம் போன்றவற்றிற்கு பயன்படுத்தும் மருந்துகளையும் வழங்கினால் நன்றாக இருக்கும். அதைத்தவிர எங்களது அம்புலன்ஸ் நன்றாக பாவனையில் இருந்தது.

காரைநகர் வைத்தியசாலையின் அம்புலலன்ஸ் பழுதடைந்ததன் காரணமாக அந்த அம்புலன்ஸ் எமது வைத்தியசாலையில் விட்டுவிட்டு எங்களது வைத்தியசாலை அம்புலன்ஸை எடுத்துச் சென்றனர்.

காரைநகர் செல்லும் வீதி மிகவும் மோசமான நிலையில் உள்ளது. ஆகையால் எமது அம்புலன்ஸின் நான்கு ரயர்களும் பழுதடைந்து ஓட முடியாத நிலையில் இருந்தன.

5 ஆயிரம் கிலோமீற்றர் தூரத்தில் அம்புலன்ஸ் சேவிஸ் போடவேண்டிய தேவை உள்ளது. ஆனால் 9 ஆயிரம் கிலோமீற்றர்கள் ஓடிய பின்னரும் சேவிஸ் போடுவதற்கு நிதி வசதி இல்லாத நிலை காணப்பட்டது. அத்துடன் வேகக்கட்டுப்பாட்டு பாகங்களும் மோசமடைந்த நிலையில் உள்ளன.

ஆகையால் இந்த அம்புலன்ஸை பாவிப்பது நோயாளி, சாரதி மற்றும் அம்புலன்ஸுக்கு ஆபத்தானது. எனவே ஜனவரி மாத இறுதியில் இருந்து இந்த அம்புலன்ஸை பாதிப்பதில்லை என முடிவு செய்யப்பட்டது.

வடமாகாணத்துக்கான நிதி ஒதுக்கீடுகளில் பாரபட்சம் காணப்படுகிறது. வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்படும் நிதியில் பெருமளவு நிதி வவுனியா மாவட்டத்துகக ஒதுக்கப்படுகிறது. கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடானது மிகவும் குறைவாக இருப்பதாகவே எனக்கு தெரிகிறது.

யாழ்ப்பாண வைத்தியசாலைகளில் உள்ள ஆறுக்கும் மேற்பட்ட அம்பிபுலன்ஸ்கள் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட பழுது பார்க்கும் நிலையங்களில் திருத்தப்பட்டு, அதனை மீள எடுக்க முடியாத நிலை காணப்படுகிறது. ஏனெனில் திருத்திய அம்புலன்ஸ்களை மீள எடுப்பதற்கு நிதி வசதி இல்லை.

ஆகையால் ஒரு சில அம்புலன்ஸ்கள் தொடர்ந்து அனைத்து இடங்களிலும் சேவையில் ஈடுடுகின்றன.

இதனால் எரிபொருள் வீண்விரயம் செய்யப்படுவதுடன் அம்புலன்ஸும் விரைவில் பழுதடைகிறது. எமக்கு கிடைக்கும் மருந்துகளின் அளவுகளும் குறைவாகக் காணப்படுகின்றன.

அந்த மருந்துகளை எடுத்து வருவதற்கு அம்புலன்ஸ் இல்லாமல் தாமதிப்பதால் எமக்கான மருந்துகள் வேறு வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படுகின்றன.

எனவே, புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்ற உறவுகளும் நல்லுள்ளம் கொண்ட உறவுகளும் முன்வந்து எமக்கான மருந்துகள் வாங்குவதற்கும் ஏனைய வைத்திய சேவைகளுக்குமான உதவிகளை வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# நிறுத்திவைக்கப்பட்ட வீட்டுக் கடன் வழங்கும் பணி மீண்டும் ஆரம்பம்!

கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வீட்டுக்கடன்கள் மற்றும் உதவிகள் வழங்கும் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பத்தரமுல்லையில் நடைபெற்ற தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர்கள் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாடளாவிய ரீதியில் எதிர்வரும் தவணையைப் பயனாளிகளுக்கு கடன் மற்றும் உதவிகளை வழங்குவதற்காக வீடமைப்பு உதவி வாரம் அறிவிக்கப்படவுள்ளது.

இதன்படி, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையான ஒரு வார காலத்துக்குள் கடன் மற்றும் உதவித்திட்டங்களை அடுத்த தவணையாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

எனவே, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் முடியும் வரை புதிய திட்டங்களை ஆரம்பிக்க வேண்டாம் என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்களின் பாதுகாப்புக்காக 30 கோடி ரூபா வைப்புத் தொகையாக வழங்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி தெரிவித்துள்ளார்.

இந்த தொகையின் மாதாந்த மீளப்பெறல் மூலம் பெறப்படும் தொகையில் இருந்து 5 கோடி ரூபா இந்த வைப்பு நிதிக்காக மாதாந்தம் ஒதுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# ஹஜ் முகவர்கள் நியமிக்கப்படவில்லையாம் கடவுச்சீட்டு, முற்பணம் செலுத்தவேண்டாம்!

## முஸ்லிம் சமய திணைக்களம் அறிவிப்பு

2023 ஆம் ஆண்டுக்கான ஹஜ் பயணத்தை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்வதற்காக இதுவரை முகவர்கள் நியமிக்கப்படவில்லை.

எனவே, முகவர்களிடம் கடவுச் சீட்டையோ, முற்பணத்தையோ வழங்கவேண்டாம் என முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, திணைக்களத்தின் அறிவிப்பின்றி மேற்கொள்ளும் கொடுக்கல் – வாங்கல்களை திணைக்களம் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது என்றும் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான ஹஜ் கடமை தொடர்பில் திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட்.ஏ.எம். பைசல் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இதுவரை எந்தவொரு ஹஜ் முகவர்களையும் 2023 ஆம் ஆண்டுக்கான ஹஜ் யாத்திரிகைக்கான முகவர்களாக உத்தியோகபூர்வமாகத் தெரிவு செய்யவில்லை என்பதை அறியத் தருகிறேன்.

எனவே, 2023 ஆம் ஆண்டு ஹஜ் கடமைகளை நிறைவேற்ற விரும்புபவர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ அறிவிப்பு வரும் வரை எந்தவொரு முகவர்களிடமும் கடவுச் சீட்டையோ, முற்பணத்தையோ வழங்குவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

மேலும், திணைக்களத்தின் மேற்படி அறிவிப்பின்றி மேற்கொள்ளும் எந்தவித கொடுக்கல் – வாங்கல்களுக்கும் திணைக்களம் பொறுப்பேற்காது என்பதை அறியத் தருகின்றேன் என்றும் திணைக்களத்தின் பணிப்பாளர் பைசல் மேலும் தெரிவித்துள்ளார்.

# குறைபாடுடைய 7 லட்சம் வாகனங்களை மீளப்பெற மோ.திணைக்களம் நடவடிக்கை

இலங்கையில் உள்ள வாகன பாவனையாளர்களுக்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களம் முக்கிய அறிவுறுத்தலொன்றை விடுத்துள்ளது.

அதற்கமைய, இலங்கையில் 7 லட்சத்துக்கும் அதிகமான மோட்டார் வாகனங்கள் குறைபாடுள்ள காற்றுப் பைகள் மற்றும் ஏனைய பாதுகாப்பு குறைபாடுகளுடன் இருப்பதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிசாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையின் வீதிகளில் பழுதடைந்த காற்றுப் பைகள் கொண்ட எஸ்யுவி உட்பட பல நவீன மகிழுந்துகள், எவ்வித பரிசோதனையும் இன்றி பயணிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வாகன இறக்குமதி முகவர்கள், பாதுகாப்பு குறைபாடுகளுடன் அடையாளம் காணப்பட்ட வாகனங்களின் உரிமையாளர்கள் தொடர்பான விபரங்களை திணைக்களத்திடம் இருந்து சேகரித்து, அந்த வாகனங்களை திரும்பப்பெற நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பழுதடைந்த காற்றுப்பைகளை கொண்டுள்ள வாகனங்களை செலுத்துவது ஆபத்தான நிலைமையை ஏற்படுத்தும் என்பதால் பாதுகாப்பற்ற வாகனங்கள் தொடர்பிலான தகவல்கள் தொகுக்கப்பட்டு ஊடகங்கள் ஊடாகப் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படவுள்ளதாக அந்தத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# இலங்கை அபார வெற்றி!

## பங்களாதேஷை 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது



தென்னாபிரிக்காவில் நடந்து வரும் ரி20 பெண்கள் உலகக் கோப்பைத் தொடரில் பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை அணி நேற்று அபார வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் அணியை 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இந்தத் தொடரில் இலங்கை அணி பதிவு செய்யும் இரண்டாவது மிகப் பெரிய இது.

நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. 20 பந்துப் பரிமாற்ற முடிவில் அந்த அணி8இலக்குகள்இழப்பிற்கு 126 ஓட்டங்கள் பெற்றது. இரண் டா வது பந்துப் பரிமாற்றத்தின் முதல் பந்திலேயே பங்களாதேஷின் தொடக்க வீராங்கனை முர்ஷிதா காதுன் ரன் அவுட் ஆனார். பந்தை பைன் லெக் திசையில் தட்டடிவிட்டு சோம்பேறித்தனமாக மெதுவாக ஓடி அவர் மறுமுனையை அடைய முன்னர் களத்தடுப்பாளரிடம் இருந்த விர்ர்ர் எனப் புறப்பட்ட பந்து இலக்கை இடித்துச்சரித்தது. துப்பாடாத பக்கம் நோக்கி பந்து வீசப்படும் என்றுஎண்ணாததால்அவர் இலக்கை இலகுவில் பறிகொடுத்தார்.

இருப்பினும் சோபனா மோஸ்தரியுடன் சேர்ந்த தொடக்க ஆட்டக்காரரான மிமா சுல்தானா (20) திறம்பட ஆடி அணியின் எண்ணிக்கையை அதிகரித்தார். அணி 36 ஓட்டங்களை எடுத்திருந்தபோது அவர் ஆட்டமிழந்தார். அந்த அணி சார்பில் சோபனா மோஸ்தரி ஆகக் கூடுதலாக 29 ஓட்டங்களைப் பெற்றார். நைகர் சுல்த்தானா (28), லதா மொண்டல் (11) ஆகியோர் தவிர மற்றெல்லாரும் ஒற்றை இலக்கத்துடனேயே ஆட்டமிழந்தனர். ஓதி ரணசிங்க 3 இலக்குகளையும் சாமரி அத்தபத்து 2 இலக்குகளையும் வீழ்;தினர்.

பதிலுக்குத்தனது ஆட்டத்தொடங்கிய இலங்கை அணி ஓட்டங்களை மெதுவாகவே சேர்த்தது. 17 ஓட்டங்கள் இருக்கும்போது முதல் இலக்கு வீழ்ந்தது. சாமரி அத்தப்பத்து 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இலங்கை அணி பவர் பிளே பந்துப் பரிமாற்றங்களில் வெறும் 27 ஓட்டங்களையே பெற்றது. அதற்குள் 3 இலக்குகளையும் இழந்தது. பங்களாதேஷ் அணி பவர் பிளே நேரத்தில் 2 இலக்குகள் இழப்புக்கு 48 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆனால், நிலைத்துநின்றுஆடிய இலங்கையின் தொடக்க விராங்கனை ஹர்சிதா சமரவிக்கிரம 69 ஓட்டங்கள் விளாசினார். அவற்றில் ஒரு சிக்ஸ், 8 பவுண்டறிகள் அடக்கம். அவரோடு இணைந்த நிலக்ஷி டி சில்வாவும் பந்துகளை விரட்டி அடிக்க இலங்கை அணி 18.2 பந்துப் பரிமாற்றங்களி லேயே வெற்றியைத் தட்டிப் பறித்தது. இந்த இணை களத்தில் நின்று 104 ஓட்டங்களைச் சேர்த்தது.

மருஃபா அக்தர் மட்டுமே அந்த மூன்று இலக்குகளையும் வீழ்த்தியிருந்தார்.

3 இலக்குகள் இழப்பிற்கு 129 ஓட்டங்களைச் சேர்த்த இலங்கை அணி 7 இலக்குகளால் அபார வெற்றி பெற்றது. உலகக் கோப்பைப் போட்டிகளுக்குச் செல்லும்போது ஐசிசி தர வரிசையில் 9ஆவது இடத்தில் இருந்த இலங்கை அணி மீது பெரும் எதிர்பார்ப்புக்கள் ஏதும் இருக்கவில்லை. ஆனால்தொடர்ந்து இரு அடுத்தடுத்த வெற்றிகளைப் பெற்று கவனத்தை ஈர்த்துள்ளது அந்த அணி.

# உனாட்கட் விடுவிப்பு

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் இருந்து இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜெயதேவ் உனாட்கட விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய அணி நான்கு டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியாவுடன் விளையாடி வருகின்றது. உள்ளது. அதில் நாக்பூரில் நடந்த முதல் டெஸ்டில் இந்தியா, இன்னிங்ஸ் மற்றும் 132 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெரும் வெற்றி பெற்றது.

இந்த நிலையில் 2ஆவது டெஸ்ட் போட்டியில் இருந்து இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜெயதேவ் உனாட்கட விடுவிக்கப்பட்டுள்ளார். ரஞ்சிக் கோப்பை இறுதிப் போட்டியில் சௌராஷ்டிரம் அணிக்காக உனாட்கட விளையாடுவதால் விடுவிக்கப்படுவதாக இந்திய கிரிக்கெட் சபை தகவல் வெளியிட்டுள்ளது. முன்னதாக பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரில் பங்கேற்க இந்திய அணி சார்பில் சிராஜ், மி, உமேஷ்யாதவ், ஜெயதேவ் உனாட்கட ஆகிய 4 வேகப்பந்து பந்து வீச்சாளர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது. தற்போது அதில் ஜெயதேவ் உனாட்கட விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்தியா–ஆஸ்திரேலியா அணிகள் மோதும் 2வது டெஸ்ட பெப்ரவரி 17 ஆம் நாள் தில்லியில் தொடங்குகிறது.

# பாகிஸ்தானை பந்தாடியது இந்தியா! 7 இலக்குகளால் மகத்தான வெற்றி

ரி20 மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது.

ஐசிசி நடத்தும் ரி20 மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி தென்னாப்பிரிக்காவில் நடைபெற்று வருகிறது. நேற்றுகேப்டவுனிலுள்ளநியூலேண்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதின.

முதலில் விளையாடிய பாகிஸ்தான் மகளிர் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகள் இழப்புக்கு 149 ஓட்டங்கள் குவித்தது.

பாகிஸ்தான் வீராங்கனைகள் முனீபா அலி 12, ஜவேரியா கான் 8 ஓட்டங்கள் எடுத்தனர். ஆனால் அணித் தலைவி மரூஃப் அபாரமாக விளையாடி 68 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். 55 பந்துகளைச் சந்தித்து இந்த ஓட்டங்களை அவர் குவித்தார். இதில் 7 பவுண்டறிகள் அடங்கும். அவருடன் இணைந்து ஆடிய ஆயிா நசீம் 25 பந்துகளைச் சந்தித்து 43 ஓட்டங்களை விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தார். இவரது எண்ணிக்கையில் 2 பவுண்டரிகளும், 2 சிக்ஸர்களும் அடங்கும்.

இந்திய மகளிர் அணி தரப்பில் ராதா யாதவ் 2 விக்கெட்களைக் கைப்பற்றினார். தீப்தி வர்மா, பூஜா வஸ்த்ரகர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைச் சாய்த்தனர்.

பின்னர் விளையாடிய இந்திய மகளிர் அணி 19 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 151 ரன்கள் ரன்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி கண்டது. இந்திய அணி தரப்பில் யாஸ்திகா பாட்டியா 17, பாலி வர்மா 33, அணித் தலைவர் ஹர்மன்பிரீத் கவுர் 16 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தனர்.

4ஆவது விக்கெட்டுக்கு இணை சேர்ந்த ஜெமிமா ரோட்ரிக்ஸ், இலக்கு காப்பாளர் கீப்பர் ரிச்சா கோஷ் ஆகியோர் அபாரமாக விளையாடி அணிக்கு வெற்றி தேடித் தந்தனர். ஜெமிமா ரோட்ரிக்ஸ் 53 ஓட்டங்களும், ரிச்சா கோஷ் 33 ஓட்டங்களும் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



# மூன்றாவது டெஸ்ட் இடமாற்றம்

ஆஸ்திரேலிய அணி இந்திய அணிகளுக்கு இடையிலான 3ஆவது டெஸ்ட் ஆட்டம் தரம்சாலாவில் இருந்து இந்தூருக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் 4 டெஸ்டுகள் கொண்ட தொடரில் ஆடிவருகின்றது. அதில் முதல் டெஸ்ட் முடிவடைந்துள்ளது.

3வது டெஸ்ட், தரம்சாலாவில் மார்ச் முதல் நாளிலிருந்து நடைபெறுவதாக இருந்தது. தரம்சாலா விளையாட்டுத்திடலில் சீரமைப்புப் பணிகள் நடைபெற்றதால் டெஸ்ட் ஆட்டம் நடைபெறுவதற்கு உரிய தகுதியைக் கொண்டுள்ளதா என இந்திய கிரிக்கெட் சபை ஆய்வு செய்தது. அதன் பின்னர் ஆட்டத்தை வேறிடத்திற்கு மாற்றுவது என்று திங்கட்கிழமை முடிவு செய்தது.

கடந்த வருடம் பெப்ரவரி மாதத்தில் இரு சர்வதேச ரி20 ஆட்டங்கள் தரம்சாலாவில் நடைபெற்றன. அதற்குப் பிறகு அத்திடலில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. வடிகால் வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன. வெளிக்களம் இன்னும் தயாராகவில்லை. இதையடுத்து கடந்த பெப்ரவரி 3 அன்று ஆய்வு மேற்கொண்டது பிசிசிஐ.

கடந்த வார இறுதியில் இன்னொருமுறை ஆய்வு நடத்தி – டெஸ்ட் ஆட்டம் நடத்துவதற்கான தகுதியைக் கொண்டுள்ளதா, வெளிக்களம் முழுமையாகத் தயாராக உள்ளதா எனப் பரிசோதித்த பின்னர் மைதாத்தை மாற்றும் முடிவை எடுத்தது.

# மேத்யூ குனேமன் ஆஸி. அணியில் இணைவு

இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட் போட்டிகளில் விளையாடிவரும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியுடன் அந்த நாட்டின் மற்றொரு சுழல்பந்து வீச்சாளர் மேத்யூ குனேமன் இணையவுள்ளார்.

இந்தியாவில் 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட பார்டர்–கவாஸ்கர் டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி விளையாடி வருகிறது. நாக்பூரில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியா வெற்றி பெற்று 1–0என்றகணக்கில்முன்னிலையில் உள்ளது.

ஆஸ்திரேலிய அணியில் இடம்பெற்றுஇருந்தலெக்ஸ்பின்னர் மிட்செல் ஸ்வெப்சனுக்கு குழந்தை பிறந்துள்ளது. இதையடுத்து குழந்தையைக் காண்பதற்காக மிட்செல் ஸ்வெப்சன் ஆஸ்திரேலியா திரும்பவுள்ளார். அவருக்குப் பதிலாக தற்போது இடதுகை சுழல் பந்து வீச்சாளர் மேத்யூ குனேமன் விரைவில்ஆஸ்திரேலியஅணியுடன் இணையவுள்ளார்.

# பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்த நாட்டில் சதிமுயற்சி!

## அமைச்சர் காஞ்சன சாடல்

தேர்தலுக்கு முன்னர், நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்த சில குழுக்கள் சதி செய்கின்றன என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் 8 மற்றும் 9 ஆம் திகதிக்குள் இவ்வாறான சாதிகளை செய்ய திட்டமிட்டுள்ளதாக தகவலை வெளியாகியுள்ளன என கூறியுள்ளார்.

ஏழரை மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டதையும், இரண்டு மூன்று நாள்களாக மக்கள் வரிசையில் காத்திருந்ததையும் சிலர் மறந்துவிட்டனர் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் மின்சாரசபை மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் செலவுகளையும் நிர்வகிக்க வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# கணவனின் மறைவைத் தாங்காது மனைவியும் உடனே உயிர்மாய்ப்பு!

கணவர் மாரடைப்பால் இறந்த செய்தி கேட்ட மனைவி தவறான முடிவெடுத்து தனக்குத்தானே தீ மூட்டி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், 3ஆம் குறுக்குத் தெருவில் நடந் துள்ளது.

செல்வதயாளரூபன் நாகராணி (வயது 61) என்பவரே உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் இவரது கண வர் யாழ். போதனா வைத்திய சாலையில் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார். அந்தச் செய்தியைத் தொலைபேசி ஊடாக அறிந்த மனைவி தவறான முடிவெடுத்து தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்டுள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பயனின்றி நேற்றிரவு உயிரிழந்துள்ளார். அவரது இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

## 15 வருடங்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எத்தனித்தார் என்று 23 குற்றச்சாட்டுக்கள் கந்தையா இளங்கோ மீது சுமத்தப்பட்டிருந்தன.

இது தொடர்பாக பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் காலி மேல் நீதிமன்றில் 2010ஆம் ஆண்டு நான்கு எதிரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது அவர்களில் முதன்மைச் சந்தேகநபராக இளங்கோ குறிப்பிடப்பட்டிருந்தார்.

2009ஆம் ஆண்டு இராணுவத்தினால் கைதுசெய்யப்பட்டு பயங்கரவாத விசாரணை பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகக் கொண்டவரான கந்தையா இளங்கோ. அவருக்கு எதிராக குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களும் 77 சாட்சிகளும் 27 தடயப் பொருட்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது, இளங்கோவினால் வழங்கப்பட்டதாக அரச தரப்பில் முக்கிய சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் உண்மை விளம்பல் விசாரணையில் 21.06, 2018ஆம் ஆண்டு நீதிமன்றினால் நிராகரிக்கபப்பட்டு 5 வருடங்கள் ஆகின்றன என்பதைச் சுட்டிக்காட்டினார். மேலும் 2009ஆம் ஆண்டு விமானப் படையின் குண்டு வீச்சினால் எதிரி தனது வலது காலை இழந்ததுடன் கடந்த 15 வருடங்களாகியும் விசாரணை முற்று முழுதாக நிறைவடையாது சிறையில் வாடுவதனையும் நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டு வாந்தார்.

இதனையடுத்து காலி மேல் நீதிமன்ற நீதிபதி முதலாம் எதிரியான கந்தையா இளங்கோவிற்கு இன்றையதினம் பிணைவழங்கினார். இந்த வழக்கில் சட்ட மா அதிபர் சார்பில் பிரதி மன்றாடியார் நாயகம் மொகமட் பாரி முன்னிலையாகி இருந்தார்.

## கிளிநொச்சியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒருவர் சிறிய காயங்களுக்கு சிகிச்சை பெற்ற நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இறப்புச் சடங்கு நடந்துகொண்டிருந்த வீடு ஒன்றில் இரவு 9 மணியளவில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு கைகலப்பாகி வளர்ந்து பின்னர் வாள்வெட்டில் சென்று முடிந்திருப்பதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்திருக்கிறது.

15க்கு மேற்பட்டவர்களைக் கொண்ட குழு திடீரென வீட்டுக்குள் புகுந்து வாளினால் சரமாரியாக வெட்டியதாகப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும், தாக்குதல் நடத்திய குழுவை சேர்ந்தவர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவரும் காயமடைந்தனர்.

அவசர நோயாளர் காவு வண்டி வரவழைக்கப்பட்டு அனைவரும் அதில் ஏற்றி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்..

## யாழ்.மாநகர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

700 ஆயிரம் மக்களே வாழ்கின்றனர். இருப்பினும் எமது மக்கள் 400 ஆயிரம் பேர் கனடாவில் வாழ்கின்றனர் அதற்கு இந்த நாட்டில் ஓர் திடமற்ற நிலையே காரணம் என்றும் சுட்டிக்காட்டினார்.

எதற்கு எடுத்தாலும் கொழும்பைச் சார்ந்தே நாம் இயங்கவேண்டும் என கொழும்பு எண்ணுகின்றது என்றும் மாநகர முதல்வர் இ.ஆனல்ட் கனேடியத் தூதுவரிடம் எடுத்துக் கூறினார்.

# ஆற்றைக் கடக்கப் பாலம் இன்மையால் சிரமப்படும் மன்னார் மடுக்கரை மக்கள்





மன்னார் நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மடுக்கரை, முள்ளிமோட்டை கிராமத்தில் வசிக்கும் மக்களின் போக்குவரத்துத் தேவைகளுக்கு பாலம் அமைத்துக் கொடுக்கப்படாததால் அங்குள்ள மக்கள் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் எனக் கூறுகின்றனர்.

அத்துடன் வடக்கு மாகாண ஆளுநர் தமது கிராமத்துக்கு நேரடியாக வருகை தந்து, பார்வையிட்டு, உள்ளக வீதி மற்றும் பாலம் போன்றவற்றை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மடுக்கரை முள்ளிமோட்டை கிராமத்து மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மடுக்கரை முள்ளிமோட்டை கிராமத்தில் 2018 ஆம் ஆண்டு குடியேற்றப்பட்ட 90 குடும்பங்கள் வசிக்கும் இப்பகுதியில் 18 குடும்பங்கள் ஆற்றைக் கடந்து குடியேற்றப்பட்டுள்ளன.

வீடுகளுக்கு அருகிலேயே அருவி ஆற்றின் கிளை ஆறு ஓடிக்கொண்டிருப்பதால் தற்காலிக பாலம் கூட அமைத்துக் கொடுக்கப்படாமல், அங்கே வசிப்பவர்கள் ஆற்றில் இறங்கியே ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு வருகிறார்கள்.

கோடை காலத்தில் ஓரளவு நீர் வற்றி காணப்பட்டாலும், மழைக் காலங்களில் ஆற்றில் நீர் நிறைந்து ஓடுவதால் அன்றாட கடமைகளைச் செய்ய முடியாமல் அப்பகுதி மக்கள் திண்டாடி வருகிறார்கள்.

கடந்த சில நாள்களுக்கு முன் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட போக்குவரத்து பிரச்சினையால் அவர்கள் தமது உறவினர்களின் வீடுகளிலேயே வசித்து வருகிறார்கள்.

அந்தப் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டதில் இருந்து உள்ளக வீதிகள் ஒழுங்காக அமைத்துக் கொடுக்கப்படாததாலும், குறித்த ஆற்றினை கடந்து செல்வதற்கு பாலம் அமைத்துக் கொடுக்கப்படாததாலும் அப்பகுதியில் வசிக்கும் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என அனைவரும் அன்றாட போக்குவரத்தை மேற்கொள்ளவும், பாடசாலை செல்வதற்கும் அவசர மருத்துவ தேவைகளை பெறுவதற்கும் இயலாமல் தவிக்கிறார்கள்.

மடுக்கரை மற்றும் முள்ளிமோட்டை கிராமத்தில் உள்ளக வீதிகளைச் சீரமைப்பது தொடர்பாக உரிய அதிகாரிகள் இன்று வரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனவே, வடக்கு மாகாண ஆளுநர் எமது கிராமத்து மக்கள் மீது அக்கறை கொண்டு தற்காலிகமாக பாலம் அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம வாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# உள்ளூராட்சித் தேர்தலில் அரசை கவிழ்த்து ஜனாதிபதியை மாற்ற எவராலும் முடியாது!

## அடித்துக் கூறுகிறார் பிரசன்ன



உள்ளூராட்சித் தேர்தல் அரசாங்கத்தை கவிழ்த்து ஜனாதிபதியை மாற்றக்கூடிய தேர்தல் அல்ல என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டையே தீயிட்டு கொளுத்தும், மக்களைக் கொல்வது போன்ற வன்முறை மனப்பான்மை கொண்ட ஜே.வி.பி.க்கு அதிகாரம் வழங்குவது மிகவும் ஆபத்தானது என கூறியுள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற கட்சி நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவிற்கு ஆலோசனை வழங்கி நாட்டை அராஜகமாக்கியவர்கள் இன்று வேறு கட்சிகளில் இருக்கின்றனர் எனவும் குற்றம் சாட்டியுள்ளார்.

# செலுத்தப்படாத வரிகளை வசூலிக்க தயாராகும் அரசு!

செலுத்தப்படாமல் உள்ள சுமார் 20 ஆயிரம் கோடி ரூபா வரிகளை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்க தயார் என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்காக உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் திருத்தம் செய்ய அரசாங்கம் தயாராக இருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.




## இலங்கையின் கோடீஸ்வரர் மரணம்:

# இந்தோனேசியா செல்கிறது சிஐடி

இந்தோனேசியாவில் இலங்கையை சேர்ந்த கோடீஸ்வரர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளமை தொடர்பான விசாரணைகளுக்காக அந்த நாட்டுக்கு செல்வதற்கு சிஐடியினர் தயாராக உள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இலங்கையை சேர்ந்த கோடீஸ்வரர் ஒனேஸ் சுபசிங்கவின் மரணம்தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக சிஐடியினர் இந்தோனேசியா செல்லத் தயாராகவுள்ளனர்.

ஒனேஸ்சுபசிங்கவின் மரணம்தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளமையைத் தொடர்ந்தே விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் ஆடம்பர தொடர்மாடியொன்றில் இலங்கையை சேர்ந்த கோடீஸ்வரர் ஒனேஸ் சுபசிங்க (வயது - 45) சடலமாக மீட்கப்பட்டார்.

இதேவேளை, சுபசிங்கவின் கொலை இலங்கையில் திட்டமிடப்பட்டு இந்தோனேசியாவில் நிறைவேற்றப்பட்டதாகவும் உயிரிழுந்தவரின் மனைவி மற்றும் அவரது நண்பி இதன் பின்னணியில் உள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.02.2023 இல் வெளியிடப்பெற்றது.